Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 071 | வெள்ளிக்கிழமை | தை 23 ஆம் நாள் 05 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## இலங்கையின் சுதந்திர நாளில்

# தெற்கில் கொண்டாட்டம்

# வட - கிழக்கில் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 5

இலங்கையின் 73ஆவது சுதந்திர நாள் தென்பகுதியில் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டன. ஆனால் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கையின் சுதந்திர நாள் 'கரிநாளாக' அறிவிக்கப்பட்டு பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 19



## தடைகளால் முடங்காமல் உறவுகள் போராட்டம்!!!

யாழ்ப்பாணம், பெப். 5

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகளுக்கு அமைதிவழியில்- ஜனநாயக ரீதியில் போராட்டங்கள் நடத்துவதற்கு தடைகள் விதிக்கப் 19



பாதுகாப்புத் தரப்பினரின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவாயில் ஒன்றில் கட்டப்பட்டிருந்த 'கரிநாள்' பதாகை. (ஓ,22)

## மலையகம் இன்று முடங்கும்

ஹற்றன், பெப். 5

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் கோரி இன்று மலையகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி 19

## யாழிலிருந்து இடம்பெயரும் வடக்கு மாகாண திணைக்களங்கள்

### ஆளுநர் சாள்ஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 5

வடக்கு மாகாண சபையின் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் காணித் திணைக்களம் என்பனவற்றை மாங்குளம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களுக்கு இடமாற்றுவ 19



சுதந்திர நாள் அணிவகுப்பு...

## ராஜபக்சக்கள் தலைமையில் இலங்கையின் சுதந்திர நாள்

### கொரோனாக் காலத்திலும் 1, 800 பேர் பங்கேற்பு

கொழும்பு, பெப். 5

இலங்கையின் 73ஆவது சுதந்திர நாள் தேசிய நிகழ்வு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் தலைமை 19

## யாழில் சு.கவின் ஏற்பாட்டில் பேரணி

### தடையே ஏற்படுத்தாத பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப். 5

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் 'ஒரே நாடு ஒரே இனம்' என்ற பதாகையுடன் யாழ்ப்பாண நகரில் 19



பேரணியில் கலந்து கொண்ட ஒருவர் இலங்கையின் தேசியக் கொடியை தலைகீழாகப் பிடித்திருந்தார்.

## பேரணியில் இன்று இணையுங்கள்

### வவு. முஸ்லிம்களுக்கு ரிஷாத் அணி அழைப்பு

வவுனியா, பெப். 5

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் வவுனியா மாவட்ட முஸ்லிம் மக்கள் அனை 19

## ஐ.நா. அமைதிப் படையில் இலங்கையை இனியும் அனுமதிக்கவேண்டாம்!

### சூக்கா கோரிக்கை

கொழும்பு, பெப். 5

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையின் அடிப்படையில் இலங்கைப் படையினரை அமைதிப் 19

## சுதந்திரக் கட்சியின் பேரணி; கலந்துகொண்டவர் கைது

### வாள்வெட்டுக்குழு உறுப்பினர் என்கின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப். 5

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர யாழ்ப்பாணத்தில் கலந்து கொண்ட, 19

## தமிழர் தலைநகரை வந்தடைந்த பேரணி

திருகோணமலை, பெப். 5

தமிழ்பேசும் மக்கள் மீதான அரச அடக்குமுறைகளுக்கு எதிராகவும், சர்வதேசத்திடம் 19

## அலையெனத் திரண்டு ஆதரவளித்த முஸ்லிம்கள்

மட்டக்களப்பு, பெப். 5

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நீதிக்கான போராட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றும் முஸ்லிம்கள் பேரணி 19

## பேரணி 7 ஆம் திகதியே முடிவடையும்

திருமலை., பெப். 5

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தொடர் பேரணி நாளை மறு 19

### சிங்கள பௌத்த தலைவன் நான்

## பௌத்த மத கோட்பாடுகளுக்கு அமைய நாட்டை நிர்வகிப்பேன்

### சுதந்திர நாளில் கொழும்பில் கோத்தா கொக்கரிப்பு

கொழும்பு, பெப். 5

நீங்கள் கேட்ட தலைவர் நான். நீங்கள் என்னிடம் ஒப்படைத்த பொறுப்பை குறைவின்றி நிறைவேற்றுவேன். அதே 19



# பேரணியில் முஸ்லிம்களின் பலத்தை நிரூபிப்போம்

மன்னார், பெப். 5

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை சிறுபான்மை சமூகத்தின் உரிமை மீட்புப் பேரணியில் எமது பலத்தை நிரூபிப்போம் என்று அகில இலங்கை மக்கள் காங்ரஸின் மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எச்.எம் .முஜாஹிர் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் தொடர்ச்சியாக சிங்கள பேரினவாதிகளால் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு சிங்கள ஏகாதிபத்தியம் தலைவிரித்தாடுகிறது.

தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிப்பு, முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு போன்ற விடயங்களைச் செய்து சிறுபான்மைச் சமூகத்தை திட்டமிட்டு பழிவாங்குகிறார்கள்.

சிங்கள ஆட்சியாளர்களின் இத்தகைய செயலைக் கண்டித்து ஆரம்பிக்கப்பட்டுள்ள பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என்னும் தமிழ் பேசும் மக்களின் உரிமை மீட்புப் பேரணி நாளை மாலை மன்னார் நகரத்தை வந்தடைய உள்ளது. இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டு பேரணிக்கு முழு ஆதரவை வழங்கவுள்ளனர் என்று மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.எம் முஜாஹிர் தெரிவித்தார். (து-213)

# தமிழராகப் பிறந்தால் மட்டும் போதாது கொஞ்சமாவது தமிழ் உணர்வுடன் வாழுங்கள்!

## வவுனியா உறவுகள் கோரிக்கை
## தடையையும் தாண்டி சுதந்திரதினத்தில் உணவு தவிர்ப்பு

வவுனியா, பெப். 5

**தமிழனாகப் பிறந்தால் மட்டும் போதாது கொஞ்சமாவது தமிழ் உணர்வுடன் வாழவேண்டும் என்று கூறி, நீதிமன்றத் தடையையும் மீறி வவுனியாவில் நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வவுனியா சங்கத்தினர்.**

நேற்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது உறவுகள் மேலும் தெரிவித்ததாவது:

உரிமை பற்றியோ, சுதந்திரம் பற்றியோ தமிழ் மக்கள் சிந்திக்கும் போதெல்லாம் இனவாத அரசுகளின் இரும்புக்கரம் கொண்டு அடக்கி ஒடுக்கப்படுகிறோம். பயங்கரவாதத்தை ஒழிக்க உதவுகிறோம் எனக் கூறி லட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டமைக்கும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கும் இலங்கை அரசுக்குத் துணை போன சர்வதேசம், பயங்கரவாதத்தை அழித்துவிட்டதான இலங்கை அரசின் அறிவிப்புடன் அமைதியாகி ஒதுங்கிக்கொண்டது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க எதுவித நடவடிக்கைகளும் எடுக்க முன்வரவில்லை. தமிழ் மக்கள் பாரபட்சமாக இனத்துவேசத்துடன் நடத்தப்படுகின்றமைக்கோ இலங்கையிலே ஒரே குற்றத்துக்கு தமிழர்களுக்கு ஒரு நீதியும், சிங்களவர்களுக்கு வேறொரு நீதியும் என்று பகிரங்க




மாகவே இனப் பாரபட்சம் காட்டப்படுவதையோ சர்வதேசம் கண்டுகொள்ளவில்லை. மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பன புனித பிரதேசம் என்ற பல சாட்டுப்போக்குகள் கூறி தமிழர்களின் பூர்வீக நிலங்களை திட்டமிட்டு அபகரிக்கின்றன. எமது புராதன கோவில்களில் அடாத்தாகவும் சர்வாதிகாரமாகவும் எமது கடவுள் விக்கிரகங்கள் அகற்றப்படுகின்றன. அதற்குப் பதிலாக புத்தர் அங்கு குடியேற்றப்படுகின்றார். நீதிமன்றத்துக்குச் சென்று, தடை உத்தரவு பெறப்படுகின்றது. இலங்கையில் தமிழர்களை மட்டும் தான் சட்டம் கட்டுப்படுத்துகின்றது.

இதுவரை எங்களுடன் சேர்ந்து போராடிய, 80க்கும் மேற்பட்ட தாய் தந்தையர்கள் நீதி கிடைக்காமலேயே இறந்து விட்டனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் அவர்களது உறவுகள் தாமும் காணாமல் ஆக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்துடனேயே தொடர்ந்து போராடி வருகின்றனர். இவையாவற்றுக்கும் சர்வதேசம் வலிந்து தீர்வைப் பெற்றுத் தரும் என நாம் அக்கறையின்றி இருந்துவிட முடியாது.

தமிழ் மக்களாகிய நாம் ஒற்றுமையாக இருந்தாலே எதிரிக்கு முதல் அடி கொடுத்தது மாதிரித்தான். எனவே தமிழனாக பிறந்தால் மட்டும் போதாது கொஞ்சமாவது தமிழ் உணர்வுடன் வாழவேண்டும். இனியாவது அடக்குமுறைகளுக்கு எதிராக எழுப்பப்படும் குரலில் உங்கள் குரலும் ஒலிக்கவேண்டும்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோக ராதலிங்கம், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், பிரதேச சபை உறுப்பினர் சந்திரபத்மன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (து-110,18)

# கடந்த அரசைவிட இந்த அரசு மோசம்!

**ராஜபக்ச அரசை சாடுகின்றார் பத்தரமுல்ல சீலரத்ன தேரர்**

யாழ்ப்பாணம், பெப். 5

கடந்த அரசு சொத்துக்களை பிற நாடுகளுக்கு விற்பனை செய்கின்றது என்று கடந்த அரசின் காலத்தில் கருத்துக்கள் கூறிய தற்போதைய ஆட்சியாளர்கள், தற்போது கடந்த அரசைவிடவும் மோசமானவர்களாகச் செயற்படுகின்றனர் - இவ்வாறு ஜன செத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

சுதந்திர தினத்தையொட்டி, யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அவர் நேற்று வழங்கினார். கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நாங்கள் சுதந்தி ரத்தைக் கொண்டாடுகின்றோம். ஆனால் எங்களுக்கு ஏது சுதந்திரம்?. நாட்டின் சொத்துக்களை அந்நிய நாடுகளுக்கு விற்க இந்த அரசு முயற்சிக்கின்றது.

இந்த அரசு எங்கள் வளங்களை அந்நிய நாடுகளுக்குத் தாரை வார்ப்பதாக இருந்தால் அரசுக்கு எதிராகப் போராடவேண்டி வரும். இந்த ஆட்சியைக் கொண்டுவந்த மதத் தலைவர்களையே இந்த அரசு மதிக்கவில்லை. எங்களுக்கு எம்மதமும் சம்மதம். எங்களுடைய விகாரைகளில் உங்களுடைய தெய்வங்களான கதிர்காமம் முருகன், கணபதி, காளி, விஷ்ணு போன்ற தெய்வங்களை நாங்கள் வணங்குகின்றோம். நீங்களும் புத்தருடைய போதனைகளைக் கேட்க வேண்டும். அவர் வழி யில் நடக்க வேண்டும். தர்மம் செய்யுங்கள். - என்றார். (து-25)

# பருத்தித்துறை வீடொன்றில் கஞ்சா? அதிரடிப்படை— வீட்டுக்காரர் மோதல்

**இருவர் காயம்: மூவர் கைது: ஒருவர் தப்பியோட்டம்**

யாழ்ப்பாணம், பெப். 5

பருத்தித்துறையில் வீடு ஒன்றில் கஞ்சா போதைப்பொருள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து, அந்த வீட்டுக்குச்சென்ற கிளிநொச்சி சிறப்பு அதிரடிப் படையினருக்கும் அந்த வீட்டில் நின்றிருந்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில், இரண்டு பொதுமகன்களும் சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவரும் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த குடும்பத் தலைவர் ஒருவரும் குடும்பப்பெண் ஒருவரும் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் வெட்டுக்காயத்துக்கு இலக்காகி சிறு காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வெட்டுக்காயத்தை ஏற்படுத்தினார் என்று கூறப்படும் நபர் தப்பியோடிவிட்டார். அவர் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்று அதிகாலை பருத்தித்துறை தும்பளை எல்லைப் வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

அந்த வீட்டுக்குச் சென்ற கிளிநொச்சி சிறப்பு அதிரடிப் படையினர் கஞ்சா போதைப்பொருள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளது என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளது. எனவே வீட்டில் தேடுதல் நடத்தப்போகின்றோம் என்று கூறியுள்ளனர். எனினும், வீட்டில் கஞ்சா பதுக்கி வைத்திருக்கவில்லை என்று கூறிய வீட்டின் உரிமையாளர் உள்ளிட்ட நபர்கள் அதிரடிப்படையினரை உள்ளே செல்லவிடாது தடுத்துள்ளனர். அதன்போதே இருதரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. அதன்போது அங்கிருந்த நபரொருவர் அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவரை வெட்டிக் காயப்படுத்திவிட்டு தப்பியோடியுள்ளார்.

அதனையடுத்து, சிறப்பு அதிரடிப் படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. இதன்போது, அதிரடிப்படையினரின் வாகனத்துக்கும் சேதம் விளைவிக்கப் பட்டுள்ளது என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணை தொடர்கின்றது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-26)

## சுதந்திர தினத்தை கரிநாளாக்கி உறவுகள் யாழிலும் போராட்டம்



யாழ்ப்பாணம், பெப். 5
நாட்டின் 73ஆவது சுதந்திர தினமான நேற்று வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகேட்டும், தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரியும் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

அந்தவகையில், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கறுப்புப்பட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடன் தமிழ் அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடத்தத் திட்டமிடப்பட்ட நிலையில் போராட்ட இடத்துக்கு வருகை தந்த யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவை வாசித்துக் காண்பித்தனர்.

எனினும், நீதிமன்றக் கட்டளையில் பெயர் குறிப்பிடப்பட்ட எவரும் ஆர்ப்பாட்டத்தில் இல்லாமையால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரின் அறிவுறுத்தலை ஏற்க மறுத்தனர். போராட்டத்தைத் தடுக்க பொலிஸார் கடும் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பயனளிக்கவில்லை.

பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பித்த குறித்த போராட்டம் முனீஸ்வரன் வீதி ஊடாக பேரணியாகச் சென்று முனீஸ்வரன் கோவில் முன்பாக நிறைவுற்றது. (த-20)



கிளிநொச்சியில்

# வாயைக் கட்டி போராட்டம்!

கிளிநொச்சி, பெப். 5
நீதிமன்ற தடையையும் மீறி வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சியில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி பழைய மருத்துவமனை முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த பேரணி ஏ9 வீதி வழியாக பழைய மாவட்டச் செயலகம் வரை சென்றது. இதன்போது இலங்கை அரசின் கடந்த கால செயற்பாடுகளைக் கண்டித்தும், சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கோசங்கள் எழுப்பப்பட்டன. கறுப்பு கொடிகள் மற்றும் பதாகைகள் ஏந்தியவாறு மக்கள் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் இணைந்தவர்கள் வாயைக் கறுப்புத் துணிகளாலும் கட்டியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவிருந்த மக்களை புதுக்குடியிருப்பில் பொலிஸார் தடுத்து வைத்திருந்தமை தொடர்பிலும் இதன்போது கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பேரணியில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-6)

புலனாய்வாளர்களால்

## வவுனியா போராட்டத்தில் செய்தி சேகரிக்க இடையூறு


வவுனியா, பெப். 5
வவுனியாவில் நேற்று நடைபெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கவனவீர்ப்பு போராட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு புலனாய்வாளர்களால் இடையூறு ஏற்படுத்தப்பட்டது.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணிக்கு உணவு தவிர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு செய்தி சேகரிப்பதற்குச் சென்ற வவுனியா பிராந்திய ஊடகவியலாளரான பாலநாதன் சதீசன் என்பவருக்கு அங்கு நின்ற புலனாய்வாளர் ஒருவர் இடையூறு ஏற்படுத்தினார்.

குறித்த ஊடகவியலாளருடன் முரண்பட்டு அவரது கடமைகளுக்கும் இடையூறை ஏற்படுத்தியிருந்தார். இதனால் அவர் தனது செய்தி சேகரிப்பு பணியை சரியான முறையில் சுதந்திரமாக மேற்கொள்ள முடியவில்லை.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களைக் கண்காணிக்கும் புலனாய்வாளர்கள் போராட்டம் மேற்கொள்ளும் தாய்மார்களின் உரைகளையும் அவர்களது விவரங்கள் தாங்கியிருந்த பதாகைகளையும் ஒளிப்படம் பிடித்து அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக குறித்த போராட்டங்கள் தொடர்பாக செய்தி சேகரிக்கச்செல்லும் உடகவியலாளர்களையும் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தும் செயற்பாடுகளும் நீடிக்கின்றன.

புலனாய்வாளர்களின் இந்தச் செயற்பாடுகளால் சுதந்திரமாக ஊடகப்பணிகளை மேற்கொள்ளவேண்டிய ஊடகவியலாளர்கள் பல்வேறு இடையூறுகளையும், அச்சுறுத்தல்களையும் சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-110)



ராஜீவ் கொலை;

## எழுவர் விடுதலையை தமிழக ஆளுநர் நிராகரிப்பு

டில்லி, பெப். 5
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தடுப்பில் உள்ள பேரறிவாளன் உள்பட 7 பேரை விடுவிக்கும் பரிந்துரையை தமிழக ஆளுநர் நிராகரித்துள்ளார். பேரறிவாளன் உட்பட 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசின் பரிந்துரையை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் நிராகரித்துள்ளார். மேலும் இந்த விடுதலை தொடர்பான முடிவை எடுக்க குடியரசுத் தலைவருக்கே அதிகாரம் உள்ளது என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார். (த-இ)

## தவறான முடிவெடுத்த முதியவர் சாவு

யாழ்ப்பாணம், பெப். 5
மருமகன் இறந்த சோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத முதியவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் உரும்பிராய் மேற்கில் நேற்று இடம்பெற்றது. இதே பகுதியைச் சேர்ந்த செல்லக்குட்டி தவச்செல்வம் (வயது - 48) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

5 நாள்களுக்கு முன்னர் தீக்காயங்களுக்கு உள்ளாகியிருந்த மருமகன் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். அவரின் இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் முதியவர் தவறான முடிவெடுத்தார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணை நடத்தினார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையில் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். (த-25)

## வடக்கில் 8 பேருக்கு கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், பெப். 5
வடக்கில் 387 பேருக்கு நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிஞோதனைகளில் 8 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 387 பேருக்கும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்குறித்த 8 பேரில் 6 பேர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஐந்து பேர், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மன்னார் முசலியில் அண்மையில் உயிரிழந்த நபருடன் தொடர்பில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. மற்றைய நபர் மன்னார் முசலியில் வாடி அமைத்து மீன் பிடிப்பவர். ஏனைய 2பேரும் வவுனியாவில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (த26)

கடல் மூலம்

## தாயகம் திரும்பியவர் கைதாகி தனிமையில்!

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வளலாய் பகுதிக்கு சட்டவிரோதமாக நாடு கடந்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் அதே பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பலாலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் 2012ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்றிருந்தார் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-25)

# வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலய வழக்கு ஒத்திவைப்பு

**திருகோணமலை, பெப்.5**

**திருகோணமலை, கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயம் தொடர்பான வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.**

வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த இடத்தில் பௌத்த தாதுகோபுரம் அமைக்க முயற்சிக்கப்பட்டதை அடுத்து, அது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இரு தரப்புகளிலும் கனிஷ்ட சட்டத்தரணிகள் மாத்திரம் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். இந்த விடயத்தை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு வழியுண்டா? என்பது தொடர்பாகவும், தொல்பொருள்கள் இல்லாத பிரதேசம் எது எனக் கண்டறிந்து நீதிமன்றில் அறிக்கையிட வேண்டும் என்றும் கடந்த வழக்குத் தவணையில் உத்தரவிடப்பட்டிருந்தது. கடந்த மாதம் நிலவிய தொடர் மழை காரணமாக ஆய்வுகளை மேற்கொள்ள முடியாமல் போனது என்று அரச கனிஷ்ட சட்டத்தரணி மன்றுக்கு அறிவித்தார்.

சமாதான உடன்படிக்கையையும் கோவில் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்துக்கான வரைபடத்தையும் அடுத்த தவணை மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார். அத்துடன் வழக்கு விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (எ-இ)

# கிளி. அறிவியல்நகரில் விவசாய ஆராய்ச்சியகம்

கிளிநொச்சி, பெப்.5

இலங்கையின் விவசாய அபிவிருத்தியை நோக்கிய விவசாய ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகளை மேம்படுத்தும் முகமாக கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கட்டடத் தொகுதி, இன்று காலை 10.30 மணியளவில் திறக்கப்படவுள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சுமார் 2 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மற்றும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகிரா சுகியாமா ஆகியோரால் இக் கட்டடத் தொகுதி கூட்டாகத் திறக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் அழைப்பின் பேரில், கடற்றொழில் அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

## ஆணைக்குழுவுக்கு உறுப்பினர் நியமனம்

கொழும்பு, பெப்.5

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கான புதிய உறுப்பினர்கள் ஐவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று நேற்றுமுன்தினம் மாலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடிய நாடாளுமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்காக ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட ஐவரின் பெயர்களும் நாடாளுமன்றப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஜனக ரத்னாயக்கவும், ஏனைய உறுப்பினர்களாக சந்துரிகா விஜேசிங்க, மொஹான் சமரநாயக்க, உதேனி விக்ரமசிங்க, பேராசிரியர் ஜனக ஏக்கநாயக்க ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-இ)



மன். தேவன்பிட்டி றோ. க. த. மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சாதாரண தர மாணவர்களுக்கு கணித பாட மாதிரி வினாத்தாள் புத்தகம் அன்பளிப்பு செய்யப்பட்டது. 2020 ஆம் ஆண்டு கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக கற்றல் செயற்பாடுகளில் ஏற்பட்ட நீண்ட இடைவெளியை கருத்தில் கொண்டு 39 மாணவர்களுக்கு எதிர்பார்க்கை வினாத்தாள் அடங்கிய கணித பாட பயிற்சிப் புத்தகங்கள் யதீஸ் அயனிஷ்கா மாணவர் தொண்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டன. (ய-213)

## லிச்சென்ஸ்டைனுடன் இராஜதந்திர உறவு

*அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, பெப்.5

இலங்கைக்கும் லிச்சென்ஸ்டைனுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சமர்ப்பித்த இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேற்கு ஐரோப்பிய பிராந்தியத்தைச் சேர்ந்த லிச்சென்ஸ்டைன், சுவிட்சர்லாந்துக்கும் ஒஸ்ட்ரியாவுக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு சிறிய மக்கள் தொகை கொண்ட நாடாகும். 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் திகதிய இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா சாசனத்தின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (வ-இ)

## மின்விளக்குகள் இல்லாமையால் பொதுமக்கள் அசௌகரியம்

முல்லைத்தீவு, பெப்.5

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தச்சடம்பன், கரிப்பட்டைமுறிப்பு, மணவாளன்பட்டைமுறிப்பு மற்றும் 9ஆம் கட்டை ஆகிய கிராமங்களின் சந்திகளில் மின்விளக்குகளைப் பொருத்துமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு வரை செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள இந்தப் பகுதிகள் இரவு நேரங்களில் இருளில் மூழ்கியுள்ளன. இதனால் அந்த வழிகளின் ஊடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (வ-12)

## வளங்களைப் பாதுகாக்க தேசிய சபையை நிறுவுக

அத்துரலிய ரத்னதேரர் வலியுறுத்து!

தேசிய வளங்களைப் பாதுகாக்க அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி ஜனாதிபதி தேசிய சபையை நிறுவவேண்டும். அதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் அங்கம் வகிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.

மேலும், பெரிய போராட்டத்துக்கு மத்தியில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பாதுகாத்துள்ளோம். அரசாங்கத்துக்குள் எழுந்த போராட்டங்கள் வலுப்பெற்றதன் காரணமாகவே வெற்றி பெற முடிந்தது. தேசிய வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு மாத்திரமல்ல அனைத்து இன மக்களுக்கும் உண்டு. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில், ஜனாதிபதி நாட்டு மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். கிழக்கு முனையம் தொடர்பில் அரசாங்கம் சுயாதீனமான முறையில், எடுத்த தீர்மானத்துக்கு இந்தியா அழுத்தம் பிரயோகிக்கின்றமை கவலைக்குரியது. இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையிலான பொருளாதாரப் போட்டித் தன்மைக்கு இலங்கை பலியாக வேண்டிய தேவை கிடையாது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு ஆரம்ப காலத்திலிருந்தே காணப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

## பகிர்ந்து கொள்ளப்பட்ட கொள்கைகள் இலங்கையில் பின்பற்றப்படவேண்டும்!

*அமெரிக்காவின் புதிய இராஜாங்க செயலாளர் தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.5

இலங்கையில் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் அனைவருக்குமான நீதி போன்ற பகிர்ந்துகொள்ளப்பட்ட கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும். இவ்வாறு அமெரிக்காவின் புதிய இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென், இலங்கையின் 73 ஆவது சுதந்திரதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், அனைத்து மக்களுக்கும் இந்தக் கொள்கைகளை எவ்வாறு உறுதி செய்கின்றோம் என்பதே ஜனநாயகத்தின் வெற்றியைத் தீர்மானிக்கின்றது.

இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பையும் வளத்தையும் ஊக்குவிப்பதற்காக நண்பன் என்ற அடிப்படையில் அமெரிக்கா இலங்கையுடன் இணைந்து செயற்பட ஆர்வமாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## இலங்கைக்கு ஜோ பைடன் வாழ்த்து

கொழும்பு, பெப்.5

இலங்கையின் 73ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இலங்கைக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்து - பசுபிக் பிராந்திய பாதுகாப்பு மற்றும் செழிப்பை மேம்படுத்துதல் தொடர்பில் இலங்கையுடன் ஒன்றிணைந்து பங்காளராகவும் நண்பராகவும் பணியாற்ற எதிர்பார்க்கிறேன் என அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றைத் தோற்கடிக்கவும் உலகப் பொருளாதார நிலையை வழமைக்குக் கொண்டு வருவதற்கும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள அயராது ஒத்துழைப்பு வழங்குவோம் எனவும் அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாற்றத்துக்கான வழி இதுவே

இன முரண்பாடுகளுக்கு மத்தியில், இலங்கை தனது 73 ஆவது சுதந்திரதினத்தை நேற்றுக் கொண்டாடியிருக்கிறது.

சுதந்திர தினம் என்பது ஒரு நாட்டின் தேசியப் பிரஜைகள் அனைவராலும் உணர்வுபூர்வமாக மட்டுமல்லாது உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் தேசத்தின் எதிர்காலம் குறித்து உயர்ந்த நம்பிக்கைகளுடனும் கொண்டாடப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இன்று வரை எப்போதாவது இந்த நாட்டின் மக்கள் அனைவரும் ஒருமித்த, பரிபூரணமான சுதந்திர உணர்வெழுச்சியுடன் "எங்கள் நாடு,எங்களின் சுதந்திரம்" எனப் பூரித்தெழும் சிந்தனையுடன் சுதந்திர தினத்தைக் கொண்டாடி இருப்பார்களா? என்ற கேள்விக்கு மௌனத் தலைகுனிவே விடை.

'ஆளும் இனம் ஒன்று, ஆளப்படும் சிறுபான்மை இனங்கள் சில' என்னும் அதிகாரச் சமநிலையின்மை மூர்க்கம் கொண்டுள்ள ஒரு நாட்டில் ஜனநாயகம், சமதர்மம் என்ற கொள்கைக்கு. எவ்வித அர்த்தமும் இல்லாத நிலையில், சுதந்திரம் என்ற சொல்லும் அர்த்தமற்றதேயாகும்.இன மேலாதிக்கம், மத மேலாதிக்கம் என்பன மட்டுமே ஆட்சிப் பீடத்தின் அதிகாரத் தாரக மந்திரமாக இருக்கையில் சிறுபான்மையினத்தவர்கள் சுதந்திர சமத்துவத்தை நிரந்தரமாக இழந்தவர்களாகவே அடையாளப்படுத்தப்படுவர்.

நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தன்வசமாக்கிக் கொண்டு ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ள ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தனது சுதந்திர தின உரையில் "நான் ஒரு பௌத்த சிங்களத் தலைவர் அதை வெளிப்படுத்த ஒரு போதும் தயங்க மாட்டேன்"என உரத்துப் பிரகடனம் செய்ததன் மூலம் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகத்தவருக்கு என்ன சொல்ல விரும்புகிறார்? என்பது , விளக்கவுரை இல்லாமலே எல்லோருக்கும் புரிந்திருக்கும். பௌத்த சிங்கள மக்கள் விரும்பாத எதையும் சிறுபான்மையினருக்கு எள்ளளவும் கொடுக்க கோத்தாபய தயாராகவில்லை.


சட்ட விதிமுறைகளுக்கு அமைய நாட்டை நிர்வகிக்கப் போகின்றேன் எனவும் அவர் சொல்லியுள்ளார். இந்த நாட்டின் அரசியல் சட்ட விதிமுறைகள் தன் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம். அது மட்டுமல்லாது இங்கு இனச் சமத்துவத்தை இல்லாமல் செய்துள்ளதே நாட்டின் சட்டவிதிமுறைகள். ஆக இந்த நாட்டின் அரசியல் சட்ட வரையறைகளின் கீழ் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, தமது சுதந்திர இருப்பை இழந்து நிற்கும் சிறுபான்மை இனத்தவர், இந்த நாளைக் கரிநாளாகக் கறுப்புக் கொடி ஏற்றிப் போராடி நிற்கும் சூழ்நிலையில் சிங்கக் கொடியைப் பறக்கவிட்டு அதில் வாளேந்தி நிற்கும் சிங்கத்தினூடாக அரசு சொல்லும் செய்தி தான் என்ன?

இதற்கான பதிலைப் பொத்துவில் முதல் பொலிகண்டிவரை என்ற போராட்டப் பேரணி நடத்தும் மக்களின் பேரெழுச்சி உணர்வு கோரி நிற்கிறது. சட்டரீதியான அடக்குமுறைகள் எப்பொழுதுமே விடுதலைக்கான - சுதந்திரத்துக்கான குரலை மேலும் ஓங்கி ஒலித்து, மேலும் மேலும் எழுச்சி கொள்ளவே வைக்கும். இது வரலாறு எமக்கு வகுத்துக் கொடுத்த கதை. பேரணிகள், பாதயாத்திரைகள், அகிம்சை வழிப் போராட்டங்கள், பகிஷ்கரிப்புகள் என அனைத்து வழிகளிலும் நியாயம் கோரிப் போராடினாலும், பௌத்த பேரினவாதச் சிந்தனையாளரின் போக்கில் மாற்றம் வருமா? என்ற பெரும் கேள்வி மக்கள் முன்னே எழலாம். ஆனால் தற்போது தோன்றியுள்ள அரசியல் ,சூழலில் இந்த ஒன்றிணைந்த - ஒருமித்த சிந்தனையுடன்கூடிய வழிமுறையினூடே உலகின் மனச் சாட்சியைத் தட்டி உலுக்கி அனைவரும் ஒன்றிணைந்த ஒரு மாபெரும் சக்தியாக அணிசேர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இது தவிர்க்க முடியாத ஒரு போராட்ட வழிமுறை. மக்கள் சக்தியின் ஒருமித்த பேரெழுச்சியே இதனை அர்த்தமுள்ளதாக்கும். கட்சி அரசியலைப் பின்தள்ளி மக்கள் அரசியலை முன்னெடுக்கத் திரளும் பேரணியின் பின்னால் கட்சிகளும் அமைப்புகளும் பின் தொடர்வது ஒரு நல்ல சகுனமே!

கொழும்பில் சுதந்திர சதுக்க மண்டபத்தில் ஜனாதிபதி தன்னையும் தன் அரசியல் செல்நெறிகளையும் சுதந்திர தினப் பிரகடனமாக உரையாற்றும் வேளையில் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரணியின் குரல் சர்வதேச சமூகத்துக்கு கூறி நிற்கும் செய்தி காத்திரமானதாக நியாயத்தை கோருவோர்களின் போர்க்குரலாக ஒலிக்க வேண்டும். மாற்றுவழி ஏதுமில்லை. இதுவே மாற்றத்துக்கான வழி எனலாம்.

### இன்றைய கருத்தோவியம்



நன்றி - நாமல் அமரசிங்க

# நாட்டை மீட்டெடுத்ததால் இராணுவத்துக்கு அவமானம்

### கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்

**கொழும்பு, பெப்.5**

**நாட்டை மீட்டெடுத்ததால் இலங்கை இராணுவத்தைப் போன்று துன்புறுத்தல்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளான வேறெந்த இராணுவமும் உலகில் இல்லை என பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.**

ஓய்வுபெற்ற முப்படை அதிகாரிகளுக்கு சீருடைச் சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்காக இராணுவத்தினர் 29 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் அங்கவீனமுற்றுள்ளனர். ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்போதும் அரசின் கட்டளைக்கு இணங்கத் துப்பாக்கிகளை அமைதியாக வைத்திருக்க வேண்டிய நிலை எங்களுக்கே ஏற்பட்டது. பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்மீண்டும்யுத்தத்துக்குத் தயாராக வேண்டிய நிலையும் எமக்கே ஏற்பட்டது. இராணுவம் என்பது மனித படுகொலை செய்வதற்கான ஓர் அமைப்பல்ல. நாட்டு மக்களின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பொதுமக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதே இராணுவத்தின் கடமை எனத் தெரிவித்தார். (வ-இ)

## காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக திருகோணமலையில் போராட்டம்

திருமலை,பெப்.5

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி, திருகோணமலை, அலஸ் தோட்டம், இறை இரக்க திருத்தலம் முன்பாக, சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டம், சுழற்சி முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது.

'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்ட நாட்டில் சுதந்திர தினக் கொண்டாட்டம் எதற்கு' என்றவாறான, பதாகைகளை ஏந்தியவாறு உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் 20க்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியுள்ளனர். (க)



## சிங்கலே கொடியால் கண்டியில் பதற்றம்!

கொழும்பு, பெப்.5

கண்டி தலதா மாளிகை வளாகத்தில் சிங்கலே கொடியை ஏற்ற முயன்ற பௌத்த தேரரால் நேற்று அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது.

சுதந்திர தினமான நேற்றுக் காலை ரம்புக்கண கலதெனிகட விகாரையின் தலைமைப் பிக்குவான தெதிரிகிரியே சுக்கீ தேரரே கண்டி தலதா மாளிகையில் கொடியேற்ற முயற்சித்துள்ளார்.

எனினும் அதற்குப் பொலிஸார் தடை விதித்துள்ளனர். அதையடுத்து பொலிஸாருடன் தேரர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இறுதியில் தேசியக் கொடி என்று தேரர் கூறிய வித்தியாசமான ஒரு கொடியை பூசை மேடை ஒன்றில் வைத்து வழிபாட்டில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டது. இந்தச் சம்பவத்தால் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது. (எ-இ)

## வெட்டுப்புள்ளி பிரச்சினை: கொழும்பில் ஆர்ப்பாட்டம்!!

கொழும்பு, பெப்.5

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு வலியுறுத்தி கொழும்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலவசக் கல்விக்கான மாணவர் இயக்கத்தின் ஏற்பாட்டில், இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும் இணைந்திருந்தனர்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து வெட்டுப்புள்ளிக் குழறுபடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நுழைவாயிலுக்கு முன்னால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆகியோரின் உருவப் பொம்மைகளை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ற-இ)



## லேடி ரிஜ்வேயில் 158 சிறுவர்களுக்கு கொரோணாத் தொற்று

கொழும்பு, பெப்.5

**கொழும்பு லேடி ரிஜ்வே மருத்துவமனையில் மூன்றாவது அலையில் மாத்திரம் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கும் அவர்களின் தாய்மார் அல்லது பாதுகாவலர்களுக்கும் கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகக் குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரத்னசிங்கம் தெரிவித்தார்.**

இதுவரை லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் தொற்றுக்குள்ளாகியுள்ள சிறுவர்கள் தொடர்பிலும், நாட்டில் தற்போது காணப்படுகின்ற கொவிட் நிலைமை தொடர்பிலும் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்றாம் அலையின் பின்னர் லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் அவர்களின் தாய்மார் அல்லது பாதுகாவலர்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளில் 158 சிறுவர்களுக்கும் 128 தாய்மார் அல்லது பாதுகாவலர்களுக்கும் கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியின் நன்மை 80 சதவீதமான போதிலும், பொது மக்களுக்கும் இவற்றை வழங்கும்போது பெருமளவானோர் கொவிட் தொற்றுக்குள்ளாகக்கூடிய பாதிப்பிலிருந்து தவிர்த்துக்கொள்ள முடியும். அத்தோடு மரணங்களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்த முடியும்- என்றார். (ற-இ)

## தென்னைமரவாடி விவகாரம்; இடைக்கால தடை நீடிப்பு!

கொழும்பு, பெப்.5

திருகோணமலை, தென்னைமரவாடி திரியாய் மக்களின் காணிகளுக்குள் தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் திருகோணமலை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

திரியாய் பகுதியில் மக்கள் வசிப்பதற்கும் பயிர்செய்கையில் ஈடுபடுவதற்கும் இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்றும், தொல்பொருள் திணைக்கள அதிகாரி காணி உரிமையாளருக்கு முன்னறிவித்தல் வழங்கி தொல்பொருள் தொடர்பாக ஆராய வேண்டும் என்றும் நீதிமன்று கட்டளை பிறப்பித்திருந்தது. இந்த இரு கட்டளைகளையும் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை நீடித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ-இ)

## ரஷ்யத் தடுப்பூசிக்கு ஒப்புதல்: இலங்கை அரசு ஆராய்வு!

கொழும்பு, பெப்.5

ரஷ்யா மற்றும் சீனாவில் உற்பத்தி செய்யப்படும் கொவிட்-19 தடுப்பூசிகளுக்கு, அவசரகால பயன்பாட்டு ஒப்புதலைப் பெறுவதற்கான கோரிக்கைகளை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகம் தற்போது பரிசீலித்து வருகின்றது என்று தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒப்புதல் பெற அனுப்பப்பட்ட ஆவணங்களைத் தற்போது ஆணையகம் மதிப்பீடு செய்து வருகின்றது. ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் ஒப்புதல் அளித்த போதிலும், ரஷ்யாவிலும் சீனாவிலும் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளுக்கு ஒப்புதல் கிடைக்கவில்லை. தடுப்பூசிகளை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்திடம் ஒப்புதல் பெற்ற பின்னர் இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது-என்றார். (ற-இ)

## ஐ.தே.கவைக் கைகழுவ 3 உறுப்பினர்கள் முடிவு!

கொழும்பு, பெப்.4

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியமான உறுப்பினர்கள் மூவர் விரைவில் கட்சியில் இருந்து விலகவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய ரவி கருணாநாயக்க, நவீன் திஸாநாயக்க மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோரே கட்சியிலிருந்து விலகிச் செல்லும் தீர்மானத்தை கூட்டாக எடுத்துள்ளனர் என்று சிறிகொத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் கட்சி எதிர்கொண்ட பெரும் பின்னடைவையடுத்து தலைவர் பதவியிலிருந்து விலகுவேன் என்று கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். எனினும் இதுவரை தலைமைப் பதவியில் இருந்து விலகவில்லை. அத்துடன் தனது மைத்துனரான ருவன் விஜேவர்தனவை பிரதித் தலைவர் பதவிக்கு உயர்த்தியிருக்கின்றார். இவற்றால் ஏற்பட்ட அதிருப்தியாலேயே இந்த முக்கியமான மூன்று உறுப்பினர்களும் கட்சியில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## தங்கையை காட்டி அக்காவை திருமணம் முடித்து வைப்பதா?

### அரசின் சூழ்ச்சித் திட்டத்துக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு

தங்கையைக் காண்பித்து மோசடியான முறையில் அக்காவை திருமணம் முடித்து வைப்பது போலவே, கிழக்கு முனையத்தைக் காட்டிவிட்டு மேற்கு கடற்பரப்பை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர் சமந்த வித்யாரத்ன சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிழக்கு முனையத்தை விற்பனை செய்யும் திட்டத்தை தற்போது ஓரமாக வைத்துவிட்டு, கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு கடற்பரப்பை வழங்குவதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி பெரும் முதலீட்டாளர் ஒருவர் வந்து, மேற்கு முனையத்தைக் கட்டியெழுப்பினால் கிழக்கு முனையம் இருந்தும் பயன் இருக்காது. இதனை அரசு தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். துறைமுகத்தின் வடக்கா, கிழக்கா, தெற்கா, மேற்கா என்பது எமக்கு முக்கியமில்லை. நாட்டிலுள்ள தேசிய வளங்கள் எந்தவகையிலும் விற்பனை செய்யப்படக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். தங்கையைக் காண்பித்து, அக்காவை திருமணம் முடித்துவைப்பது போலவே, துறைமுக விவகாரத்திலும் மோசடியான முறையில் செயற்படுவதற்கு அரசு முயற்சிக்கின்றது. மக்களிடம் இருந்து எதிர்ப்புகள் வலுத்ததால் தற்போது ஒரு அடி பின்வாங்கியுள்ளது. தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்கான எமது போராட்டம் தொடரும்- என்றார். (ப-44)

## கஞ்சா தடையை நினைத்து கலங்கும் பொதுபல சேனா

கொழும்பு, பெப்.5

ஆங்கிலேயர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட கஞ்சா தடைச் சட்டத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை என்றால் நாம் எவ்வாறு சுதந்திர இனம் என்று கூறிக் கொள்ள முடியும்?. இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது பொதுபலசேனா அமைப்பு. இது தொடர்பாக அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைக்குள் சிகரெட் நிறுவனங்களை கொண்டு வரும் நோக்கிலேயே, ஆங்கிலேயர்கள் கஞ்சாவைத் தடை செய்தனர். இலங்கை சுதந்திரமடைந்து 73 வருடங்களாகின்றபோதும், கஞ்சாவுக்கு ஆங்கிலேயர்களால் விதிக்கப்பட்ட தடையை நீக்கிக்கொள்ள முடியாதுள்ளது. கஞ்சா என்பது சிறந்ததொரு மூலிகை மருந்து. அப்படியிருக்கையில் 73 வருட காலத் தடையை நீக்க முடியாத எமக்கு சுதந்திரத்தால் என்ன பயன் எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்?- என்றார். (எ-இ)

# அவசியமான தீர்மானங்களை எடுக்கவேண்டும் கோத்தாபய

## பாக்கீர் மாக்கார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, பெப்.5

**இலங்கையர்களின் உள்ளங்களில் பற்றி எரியும் தீயை அணைக்க அவசியமான தீர்மானங்களை எடுக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தைரியமாக முன்வர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வலியுறுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்தக் கடிதங்களின் பிரதிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதில் உள்ளதாவது:

எமது நாடு பொருளாதார, சுகாதார துறைகளில் மட்டுமன்றி, சமூக ரீதியானவும் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

எதிர்கால சந்ததிகளுக்கு கையளிக்கப் போகும் இந்த நாடு தொடர்பான எமது கனவுகளும், அபிலாசைகளும் குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் காரணமாக மழுங்கடிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியதாகும்.

கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் உடலை நல்லடக்கம் செய்வதா? தகனம் செய்வதா? என்ற விடயம் தொடர்பாக தற்போது இடம்பெற்று வரும் வாதப் பிரதிவாதங்கள் அனைத்தும், முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ள மருத்துவ, விஞ்ஞான அடிப்படையிலன்றி, வெறும் குறுகிய அரசியல் முகாம்களை மையப்படுத்தியவைகளாகும். அதனால் எமது மக்களிடையே மென்மேலும் பிரிவினைகள் தோற்றம் பெற வழிவகுக்கும். இப்போது இலங்கையர்களின் உள்ளங்களில் பற்றி எரியும் தீயை அணைக்க அவசியமான தீர்மானங்களை எடுக்க தைரியமாக முன் வருமாறும் கேட்டுக் கொள்கிறேன். என்றுள்ளது.

## ரவூப் ஹக்கீமை சந்தித்தார் இந்திய பிரதி உயர்ஸ்தானிகர்

கொழும்பு, பெப்.5

இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரிடையே சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது இலங்கையில் சமீபகாலங்களில் முஸ்லிம் சமூகத்தினர் எதிர்நோக்கும் சவால்கள் குறித்த மதிப்பீடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை விவகாரங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பில் ரவூப் ஹக்கீம் தனது கருத்துக்களை முன்வைத்தார் என இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின்போது 2019 நவம்பர் மாதர் முதல் இலங்கையின் அரசியல் தலைமையுடனான பேச்சுவார்த்தைகளை நினைவுகூர்ந்த இந்திய பிரதி உயர்ஸ்தானிகர், 13வது திருத்த்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் அர்த்தபூர்வமான அதிகாரப்பரவல் மற்றும் மாகாணசபைகள் என்ற இந்தியாவின் நீண்டகால கொள்கை அடிப்படையிலான நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். (ந-இ)

## ஷானி அபேசேகர உள்ளிட்டோருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, பெப்.5

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களும் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா நீதிமன்றில் நேற்று புதன்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொய்ச் சாட்சியத்தை உருவாக்கி, நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டமை அடங்கலாக சில குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## சுதந்திர தினத்தை முன்னிட்டு 146 கைதிகளுக்கு விடுதலை

கொழும்பு, பெப்.5

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் நாடு முழுவதும் உள்ள சிறைகளில் இருந்து 146 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

50 வருடங்களுக்கு மேலாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அதில் 25 ஆண்டுகள் வரை தண்டனை அனுபவித்தவர்களும் 65 வயதுக்கு மேற்பட்டோரும் இவ்வாறு நேற்று விடுதலை செய்யப்பட்டனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் பாலித்த சந்தன ஏக்கநாயக்க கூறியுள்ளார்.

அத்துடன் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரும் விடுக்கப்பட்டுள்ளார்.

பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே குறித்த கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-18)

## உறவு மேம்பட வேண்டும்

### சுதந்திர தின வாழ்த்து செய்தியில் மோடி

கொழும்பு, பெப்.5

இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையிலான உறவு மேலும் வலுவாக்கப்பட்டு மக்களின் செழுமை மற்றும் முன்னேற்றத்துக்கு வழிவகுக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார். அந்த வாழ்த்து செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஆண்டுகளிலும் இருநாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வலுவாக்கப்பட்டு மக்களின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்க வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் மோடி அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ச-இ)

## இராணுவத்தினருக்கு பதவியுயர்வு

கொழும்பு, பெப்.5

இலங்கையின் 73 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இராணுவத்தினருக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி 337அதிகாரிகள் உள்பட 8ஆயிரத்து 603 இராணுவத்தினர் அடுத்த உயர் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.


பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரைகள் மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-இ)

## மாணவர்களின் மனவளத்தில் கவனம் செலுத்துதல் அவசியம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.5

மாணவர்களின் ஆரம்ப ஆண்டுகளில் அவர்களின் மன ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது அவர்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமாக அமையும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



எனவே மாணவர்கள், உணர்ச்சி ரீதியாக ஆரோக்கியமானவர்களாக இருக்க பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இதனை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

### கொத்தமல்லியின் பெயரில் கழிவுகள்:

## கொள்கலன்களில் நான்கை உக்ரைனுக்கே திருப்பியது அரசு

கொழும்பு, பெப்.5

கொத்தமல்லி என்று கூறி உக்ரைனிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட தாவரக் கழிவுகள் அடங்கிய நான்கு கொள்கலன்கள் அந்நாட்டுக்கு நேற்றுத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. சுங்கத் திணைக்களத்தால் கடந்த டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஒரு கொடவத்தை பகுதியில் 8 கொள்கலன்கள் அடையாளம் காணப்பட்டன. அதையடுத்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் மூலம் கொழும்புத் துறைமுகத்தில் தாவரக் கழிவுகள் அடங்கிய மேலும் 20 கொள்கலன்கள் இருக்கின்றமை தெரியவந்தது. இந்நிலையில், ஒறுகொடவத்தை பகுதியில் உள்ள எட்டு கொள்கலன்களில் நான்கு உக்ரைனுக்கு நேற்றுத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. (வ-இ)

# பௌத்த ராச்சியத்தைக் கட்டியெழுப்ப புத்தரை துணைக்கு அழைக்கிறார் கோத்தா

## மனோகணேசன் சாடல்

**கொழும்பு,பெப்.5**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இலங்கையை அல்ல, சிங்கள பௌத்த இராச்சிய த்தையே தான் கட்டியெழுப்ப புறப்பட்டுள்ளார் என்று தெளிவுபடக் கூறி விட்டார். இதற்காக அவர், கௌதம புத்தரையும் துணைக்கு அழைத்து, தன்னை நியாயப்படுத்தியுள்ளார் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதியின் சுதந்திர தின உரையின் பிரதான சாராம்சத்தைப் பார்த்தால் இது தெளிவாகப்புரிகிறது. தேடிப்பார்த்ததில் அவரது சிந்தனையில் உள்ள நான்கு முத்தான விடயங்களைத் தனது உரையில் அவர் உதிர்த்துள்ளார்.

நாம் பல இன, மொழி, மத மக்கள் சக வாழ்வு வாழும் சுபீட்சமான இலங்கையைக் கட்டி எழுப்ப முயல்கிறோம். ஜனாதிபதி, தான் இலங்கையை அல்ல, சிங்கள பௌத்த ராச்சியத்தையே கட்டியெழுப்ப புறப்பட்டுள்ளார் என்று தெளிவுபடக் கூறிவிட்டார்.

உண்மையில் தனது இலக்கை, ஒளிவு மறைவு இல்லாமல் தெளிவாக, உள்ளதை உள்ளபடி கூறியமையையிட்டு நான் ஜனாதிபதியைப் பாராட்டுகிறேன். அவரது இலக்கை நாம் ஏற்க மறுக்கிறோம் என்பது வேறு விடயம். ஆனால், அவர் ஒழிந்து விளையாடவில்லை அல்லவா?

உலகத்துக்கு ஜனாதிபதி ஏதோ சொல்ல வருகிறார். அது என்ன என குழப்பிக்கொள்ள வேண்டாம்.


நீங்கள் தேடிய தலைவன் நான் தான். நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன். இதைச் சொல்ல நான் ஒருபோதும் தயங்கப் போவதில்லை. பௌத்த போதனைகளின் அடிப்படைகளிலேயே நான் இந்த நாட்டை ஆளுவேன். நாட்டின் சட்ட வரையறைக்குள் எல்லா இன, மதத்தவருக்கும், சுதந்திரமும், சமத்துவமும் பெற்று சமாதான சகவாழ்வு வாழ பௌத்த தத்துவத்துக்குள்ளே உரிமையுண்டு என்று அவர் உரையில் குறிப்பிட்டுள்ளார் - என்றார். (க-இ)

## தப்பிச்சென்ற 129 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, பெப்.5

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட 129 சந்தேகநபர்களுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தேகநபர்களுள் 40 பேர் வரை நாட்டில் இடம்பெற்றுள்ள பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பில் தேடப்பட்டு வருபவர்கள் எனவும், வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் தேடப்பட்டு வரும் 87 பேருக்கு சர்வதேச பொலிஸார் நீல எச்சரிக்கை விடுத்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)



## கொரோனா அச்சத்தில் உறைந்துள்ள ஆதிவாசிகள்

கொழும்பு, பெப்.5

ஆதிவாசிகளும் கொரோனா அச்சத்தில் உறைந்திருக்கின்றனர் என ஆதிவாசித் தலைவரான ஊருவரிகே வன்னிலெத்தோ தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மட்டும் 61 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 33 பேர் தம்பான ஆதிவாசிகள் வாழ்கின்ற பகுதிக்கு மிக அருகிலுள்ள மஹியங்கனையில் வசிக்கின்றனர்.

அவர்களிடமிருந்து ஆதிவாசிகளுக்கும் கொரோனாத் தொற்று ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுவதால் அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (வ-இ)

## 'கிராமத்துடன் கலந்துரையாடல்' திட்டத்துக்கு குழு நியமிப்பு

கொழும்பு, பெப்.5

கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத்திட்டத்துடன் மீண்டும் கிராமத்துக்கு செயற்திட்டத்தை செயற்படுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் தேசிய ஒருங்கிணைப்பு துணைக் குழு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நிறுவப்பட்டது.

இந்த தேசிய ஒருங்கிணைப்பு துணைக் குழுவில் அனைத்து அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச அபிவிருத்திக்கான புதிய அணுகுமுறைக்கு, வேளாண் துணைக்குழு, வாழ்வாதார துணைக்குழு, உட்கட்டமைப்பு துணைக்குழு, சமூக உட்கட்டமைப்பு துணைக்குழு மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டு துணைக்குழு என ஐந்து தேசிய ஒருங்கிணைப்பு துணைக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த ஒவ்வொரு குழுவுக்கும் துறை சார்ந்த ரீதியில் அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ந)

## நெற்செய்கைக்கு தொடர்ந்து மானியம்

கொழும்பு, பெப்.5

நெற் செய்கைக்கான உரமானியத்தைத் தொடர்ந்தும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி, பிற பயிர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குட்பட்ட உர மானியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்தார். அரசால் வழங்கப்படும் மானியம் பல்வேறு நிறுவனங்களால் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.

நெல் விவசாயிகளுக்கு வழங்குகின்ற மானியத்தை முன்னர் போன்றே வழங்கவும், அதே மானியத்தை ஏனைய விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரை வழங்கவும் நாம் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## நீண்டகால ஜனநாயகத்தை இலங்கை கொண்டுள்ளதாம்

### சபாநாயகர் பெருமிதம்

கொழும்பு, பெப்.5

ஆசியாவில் நீண்டகால ஜனநாயகம் கொண்ட நாடாக இலங்கை உள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இருந்தே தேர்தல்களின் மூலம் ஆசியாவில் நீண்டகால ஜனநாயகம் கொண்ட நாடு என்ற அடையாளத்தை நாம் கொண்டுள்ளோம். இலங்கை நாடாளுமன்றத்தின் ஊடாக நாட்டின் ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## மஹிந்த வெளியிட்ட வர்த்தமானி இரத்து!

கொழும்பு, பெப்.5

நிதியமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

குளியலறை பளிங்குத் தரைக் கற்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவது தொடர்பாக நிதியமைச்சர் மஹிந்த ராஜபக்ச வழங்கிய உத்தரவுக்கு அமைய வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியிருந்தது.

எனினும் நேற்றுமுன்தினம் மாலை வெளியான வர்த்தமானி அறிவித்தலின் மூலம், இறக்குமதிக் கட்டுப்பாட்டை நீக்குவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கான உத்தரவு மேலிடத்தில் இருந்து கிடைத்தது என்று ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் நாயகம் தமயந்தி எஸ்.தருணரத்ன தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

எனினும் எவரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பது தொடர்பாக அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. (எ-இ)

## தடையை மீறிப் பயணித்த பாரவூர்தி மீது துப்பாக்கிச் சூடு

கண்டி, பெப்.5

கண்டி, தலாதுஓயா மலைப்பகுதியில் பொலிஸ் தடையை மீறிப் பயணித்த பாரவூர்தி ஒன்றை இலக்கு வைத்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த பாரவூர்தியில் மரக்கறிகள் ஏற்றிச்செல்லும் போர்வையில் கால்நடைகளைக் கடத்திச்சென்ற நிலையிலேயே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது அந்த பாரவூர்தியில் இருந்து விற்பனைக்காக கொண்டுசெல்லப்பட்ட 18 கால்நடைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பாரவூர்தியின் சாரதி தப்பியோடியுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-இ)

## இன்றைய நாள்

**மேடம்:** அதிர்ஷ்டமான நாள். உழைப்போரின் எண்ணம் நிறைவேறும். அலுவலக முன்னேற்றம் பற்றி எடுத்த முயற்சி வெற்றி பெறும். பகைவர் ஒருவர் மனம் மாறி தாமாக முன்வந்து நட்பாவார்.

**இடபம்:** மேலதிகாரியிடம் பணிவாகப் பேசி நன்மை அடைவீர்கள். முன்னேற்றத்துக்கு எடுத்த முயற்சி ஓரளவு வெற்றி பெறும். அரசாங்க உதவி தாமதத்துக்குப் பிறகே கிடைக்கும்.

**மிதுனம்:** நன்றி மறந்தவர்களை நினைத்து வருந்த வேண்டாம். பழைய கவலைகள் தீர்வது குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள். சகலரிடமும் பிடிவாதமின்றி வளைந்து கொடுத்து போங்கள்.

**கடகம்:** எப்போதோ அறிமுகமானவர்கள் இப்போது உதவி கேட்பர். நம்பிக்கை இழக்காமல் முயற்சியில் தொடர்ந்து வெற்றி பெறுவீர்கள். முன்பு வாட்டிய சிரமங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**சிம்மம்:** பொறுமையிழக்க வேண்டிய தருணங்களில் அமைதி காப்பீர்கள். மன நிம்மதி மீளும். விட்டுப்போன தொடர்புகளைப் புதுப்பிப்பீர்கள். பிள்ளைகளின் போக்கு மாறி திடீர் மகிழ்ச்சி அளிக்கும்.

**கன்னி:** எதையும் அதிக முயற்சிக்குப் பிறகே முடிக்க இயலும். உழைப்புக்கேற்ற வருமானம் இல்லையே என வருந்தாதீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். செய்தி ஒன்று மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** புது முயற்சி சற்றுத் தள்ளிப்போனால் அது நன்மைக்கே. தாயாருக்கு நன்மை ஏற்படும். பிடிவாத குணம் வேண்டாம். பிள்ளைகளின் வாழ்வு மேம்படுவதைக் கண்டு மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் நிம்மதி உண்டாகி செயல்களில் தெளிவு வரும். வெளிநாட்டில் உள்ளவர்கள் பெற்றோரைச் சந்தித்து மகிழ்வர். குடும்பத்தினரின் செயலால் உங்களின் கௌரவம் உயரும்.

**தனுசு:** பிள்ளைகளின் குறிக்கோள் நிறைவேறி மகிழ உதவுவீர்கள். வீண் பழிகளைத் துடைத்தெறிவீர்கள். எண்ணம் ஈடேறும். கடன் எளிதாக கிடைக்க நண்பர் உதவி செய்வார்.

**மகரம் :** தவறிப்போயும் கெட்டபெயர் வராதபடி கவனமாக இருங்கள். பேசும் வார்த்தைகளால் சிரமத்துக்கு உள்ளாக வேண்டாம். உடல் உழைப்பை நம்புபவர்களுக்கு நன்மை பெருகும்.

**கும்பம்:** முன்பு சுலபமாக நிறைவேறிய செயலுக்கும் முயற்சி தேவை. தாயாருடன் சச்சரவுகள் வேண்டாம். வாகனம் வாங்குவீர்கள். பல வகை செலவுகளால் நன்மைகள் ஏற்படும்.

**மீனம்:** நன்மையும், லாபமும் வரும். நல்லவர் ஆலோசனை கிடைக்கும். எவரைப் பற்றியாவது வம்பு பேசினால் பிரச்சினை வரும். எவரிடமும் பகை வேண்டாம். சிறு இடர்களைச் சந்திப்பீர்கள்.

# மக்களுடன் நெருங்கிப் பழகுவோருக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்கவேண்டும்

*போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு*



**யாழ்ப்பாணம், பெப். 5**

**இனிவரும் காலங்களில் கொவிட் 19 தடுப்பூசி மக்களுடன் நெருங்கிப் பழகுகின்றவர்களுக்கும் வழங்கப்படுதல் அவசியம் என்று யாழ்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் மிக வேகமாக மூன்று வகை கொவிட் வைரஸ்கள் பரவி வருகின்றன. இந்நிலையில் கொவிட் நோய்க்கான தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வளர்முக நாடுகளில் அதிக அளவில் தடுப்பூசிகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் முதற்கட்டமாக சுகாதார சேவையில் பணியாற்றுபவர்களுக்குத் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்று நோய் எதிர்ப்புச் சக்தியை எமது உடலில் ஏற்படுத்துவதனால் உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியும்.

தடுப்பு மருந்தை கொள்வனவு செய்து விநியோகிக்கும்போது கட்டாயம் முதலில் யார் கூடுதலான நோயாளிகளுடன் பழகுகின்றார்களோ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் வர்த்தகர்கள், வங்கி அலுவலர்கள், பேருந்து நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் என மக்களுடன் நெருங்கிப் பழகுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதற்கு அடுத்து நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு ஊசி வழங்கப்பட வேண்டும்.

இது 18 வயது தொடக்கம் 60 வயதுடையவர்களுக்கு பொதுவாக போடப்பட்டுள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இதுவரை பக்கவிளைவுகள் கண்டறியப்படவில்லை. 18 வயதுக்கு குறைந்தவர்களுக்கும் இதற்கான ஆய்வுகள் நடத்தப்படவில்லை - என்று தெரிவித்தார். (த-20)

## வாசகர் திருமுகம்

### காணாமல் போகுமா காங்கேசன்துறை?

01.02.2021 அன்று உதயனில், 3ஆம் பக்கத்தில் "பலாலி, மயிலிட்டி, கே.கே.எஸ் பகுதிகளுக்கு தனி மருத்துவமனை அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை" என்ற செய்தி வெளியாகியிருந்தது. எமது பகுதிக்கு தனி மருத்துவமனை தேவை என்பது பற்றி செய்தி வெளியிட்டமைக்கு தங்களுக்கு நன்றி. ஆனால் கே.கே.எஸ் என்பதற்குப் பதிலாக காங்கேசன்துறை என்ற தமிழ்ப் பெயரை பயன்படுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஏனெனில் எமது இளம் சந்ததியினர் குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் பத்திரிகையைப் படிக்கும்போது, கே.கே.எஸ். என்றே அவர்கள் மனதில் பதிந்துவிடும். பின்பு அவர்கள் தமது ஊரை காங்கேசன்துறை என்று அழைப்பதை விடுத்து கே.கே.எஸ் என்றே அழைக்கத் தொடங்கி விடுவார்கள். தமிழ்ப் பெயர் மெல்ல மெல்ல காணாமல் போகும். ஆகவே இதனைக் கருத்திற்கொண்டு கே.கே.எஸ் என்பதற்குப் பதிலாக காங்கேசன்துறை என்ற தமிழ்ப் பெயரைப் பயன்படுத்தும்படி தங்களை வேண்டுகின்றேன்.

**வாசகன்,**
**காங்கேசன்துறை.**



## சற்குரு தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை

யாழ்ப்பாணம், பெப்.5

சற்குரு தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை கடந்த செவ்வாய்க்கிழமை இந்து சமயப் பேரவையில் நடைபெற்றது.

இந்து சமயப் பேரவைத் தலைவர் ஈசான.சி.சக்திகிரீவன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் பாலசந்திரன், சிறப்பு விருந்தினராக மாவை.சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். அதனைத் தொடர்ந்து இசைக் கலைஞர்களின் இசை ஆராதனையும் இடம்பெற்றது. (ரு)

## வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நிறுவப்படவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக தமிழ்ப் பிரதேசங்களில் அவசர அவசரமாக இடம்பெற்று வரும் நில அபகரிப்பு, யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அளிக்கப்பட்டமை தொடர்பில் கண்டித்து உரையாற்றிய உறுப்பினர்கள், எதிர்கால சந்ததியினருக்குத் தெரியப்படுத்தும் வகையில் எமது பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதையடுத்து வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பொருத்தமான இடத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நிறுவப்பட வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (க-115)

## வேலம்பிராய் அம்மன் கோயில் வீதிக்கு அடிக்கல்!

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு வேலம்பிராய் அம்மன் கோயில் வீதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள், தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலு, சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

1.65 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி 29.88 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளது. (ற-159)

# உலமா சபையை ஒழிக்க வேண்டும்

## ஞானசார தேரர் போர்க்கொடி

**கொழும்பு, பெப். 5**

**இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டுமாயின் உலமா சபை தடை செய்யப்பட வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்தச் சபையின் கடந்த கால நடவடிக்கைகள் அடிப்படைவாதச் செயற்பாடுகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்துள்ளன. ஆகவே இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்க விசேட குழுவை ஜனாதிபதி நியமிக்க வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாத விவகாரத்தில் கடந்த கால அரசாங்கம் செய்த தவறுகளைத் தற்போதைய அரசாங்கமும் தொடரக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## வீட்டில் உயிரிழந்த மூவருக்கு கொரோனா

### காலியில் அதிர்ச்சி

கொழும்பு, பெப். 5

வீட்டில் மரணமடைந்த மூவரது உடல்களில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அதிர்ச்சி முடிவுகள் வெளியாகியுள்ளன.

காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் வைத்து இந்த உடல்கள் மீது பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. உயிரிழந்த மூவரும் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருப்பது தெரியவந்துள்ளது. காலி மாவட்டத்தின் கறுவாத்தோட்டம், கிங்தோட்டை மற்றும் டெக்கியாவத்தை தலாப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 77 மற்றும் 59 வயதுகளையுடைய மூன்று பேர் இவ்வாறு மரணமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப)

## கோடாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப். 5

ஒரு பீப்பா கோடாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லிப்பளை பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகிறது என பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு ரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து குறித்த பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் ஒரு பீப்பா கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் மேலதிக விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுக்கப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-6)

## நீரில் மூழ்கி இருவர் சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் இருவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

ஏறாவூர், புன்னைக்குடா கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை, சூறைக்காற்றில் சிக்குண்டு ஒருவர் உயிரிழந்தார். தளவாய் கிராமத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவத்தில் மற்றொரு மீனவர் கடலில் மூழ்கிய நிலையில், மீட்கப்பட்டு, மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, மட்டக்களப்பு, பதுளை வீதியை அண்டிய புத்தம்புரி குளத்தில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தனது நண்பருடன் சேர்ந்து மீன்பிடிப்பதற்காக தோணியில் சென்றவர், தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)



## வீடமைப்பு அலுவலகம் பெண்களால் முற்றுகை

மன்னார், பெப். 5

மன்னார் வீடமைப்பு அதிகாரசபை அலுவலகத்தை முற்றுகையிட்டு பெண்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகார சபையின் மந்தமான செயற்பாட்டைக் கண்டித்தும், வீட்டுத் திட்டத்துக்கான நிதி விடுவிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜீவபுரம், சாந்திபுரம், ஜிம்றோன் நகர் பகுதிகளைச் சேர்ந்த பெண்களே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 2018 ஆண்டு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான நிதி, மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. பழைய வீடுகளும் இன்றி, புதிய வீடுகள் முடிவுறுத்தப்படாத நிலையிலும் பல்வேறு அசௌகரியங்களை தாம் எதிர்கொண்டு வருகின்றோம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்தனர். (க-213,56)



# வியட்நாம் தூதுவர் பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 5

பதவிக்காலம் நிறைவடைந்து நாட்டிலிருந்து வெளியேறும் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஃபெம் தி பிக் என்கொக் பிரதமர் மஹிந்த ராஜபக்சவைச் சந்தித்து உரையாடியுள்ளார். விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையே காணப்படும் சமயம் மற்றும் வர்த்தகம் சார்ந்த உறவுகளை மேலும் பலப்படுத்தல், விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய இரு துறைகளிலும் இரு நாடுகளது அறிவு மற்றும் செயற்பாடுகளைப் பகிர்தல், செயற்பாட்டிலுள்ள வியட்நாம் மற்றும் இலங்கை இடையேயான கல்வி மேம்பாடு மற்றும் மாணவர் பரிமாற்ற வேலைத்திட்டம் என் பலவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (வ-இ)

## மன்னாரில் இதுவரை 182 பேருக்குத் தொற்று

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 182 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதம் புதிய தொற்றாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை என்று மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவுக்கான மருத்துவ அதிகாரி மருத்துவர் கதிர்காமநாதன் சுதாகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 8 ஆயிரத்து 702 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களில் 182 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஜனவரி மாதம் மாத்திரம் 165 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பெப்ரவரி மாதம் 75 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் எவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படவில்லை.

மாவட்டத்தில் கொரோனாத் தொற்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. ஆயிரத்து 132 சுகாதாரப் பணியாளர்களில் 980 பேருக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (க-213)

## மியான்மரின் நிலைமை இலங்கையில் ஏற்படுமா?

### வாய்ப்பில்லை என்கிறார் அமைச்சர் ஷேயான்

கொழும்பு, பெப்.5

மியான்மரில் ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது போல இலங்கையில் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான ஷேயான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் எதிர்காலத்தில் பிரதேச செயலாளர் பதவிக்கும் இராணுவத்தினர் நியமிக்கப்படக்கூடும் என வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மியான்மரில் இராணுவ ஆட்சி ஏற்பட்டவுடன் மங்கள சமரவீரவே இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்து முதல் அறிக்கையை வெளியிட்டார். மியான்மரில் ஏற்பட்ட நிலைமை இங்கு ஏற்படாது. அத்துடன் பிரதேச செயலாளர் பதவிக்கு, சிவில் அதிகாரிகளுக்குப் பதிலாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் எனக் கூறப்படுவது பொய்யாகும். அவ்வாறான நியமனங்கள் வழங்கப்படமாட்டாது என்பதை மிகவும் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றோம். மியான்மரில் ஏற்பட்ட நிலை இலங்கையில் ஏற்பட வேண்டும் என எதிரணி உறுப்பினர்கள் சிலர் விரும்புகின்றனர். இராணுவச் சதிப் புரட்சிக்கு இங்கு இடமில்லை. அதேவேளை, மனித உரிமைக் குற்றச்சாட்டுகளை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு விடுக்கப்படும் சவால்களை நாம் நிச்சயம் உரியவகையில் எதிர்கொள்வோம் - என்றார். (வ-44)

## அரசும் எதிர்க்கட்சியும் கைகோர்க்க வேண்டும்

### மகா சங்கத்தினர் கோரிக்கை

கொழும்பு, பெப்.5

அரசு, எதிர்க்கட்சி ஆகியவை நாட்டுக்காக கைகோர்த்துச் செயற்பட வேண்டிய ஒரு சந்தர்ப்பத்துக்கு நாடு வந்துவிட்டது என்று சொலொஸ்மஸ்தானாதிபதி கெடிகே ரஜமஹா விகாராதிபதி அஸ்கிரிய மஹா விகாரை பீடத்தின் அனுநாயக்கர் வணக்கத்துக்குரிய உபாலி தேரர் வலியுறுத்தினார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சி அரசியல் கருத்துக்களுக்கு அடிபணியாமல் நாட்டின் நலனுக்காகத் தேசிய பிரச்சினைகள் குறித்து சுயாதீனமாக ஆலோசனை வழங்குவது துறவிகளின் பொறுப்பு என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். (ப)

# மருத்துவர்களுக்கு வடக்கு, கிழக்கு இடமாற்றப் பட்டியல் இனி இல்லை!

## ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என வடக்கு ஆளுநர் சாள்ஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 5

இதுவரை காலமும் நடைமுறையிலிருந்து வந்த வடக்கு, கிழக்கு இடமாற்றப் பட்டியல் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு நியமனம் பெறும் மருத்துவர்கள் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த பின்னரே இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. சுகாதாரத்துறை தொடர்பான விடயம் ஆராயப்பட்டதுடன் மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத்துறையின் பல்வேறு வெற்றிடங்கள் தொடர்பிலும் பேசப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை இரண்டு வாரங்களுக்கு முன்னர் சந்தித்திருந்தேன். வடக்கு மாகாணத்தில் மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் குறித்துப் பேசினேன்.

சாதாரணமாக ஓர் இடத்தில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த பின்னரே மருத்துவர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு இடமாற்றப்பட்டியல் இருக்கின்றமையால் அந்த மாகாணங்களுக்கு பணிபுரிய வரும் மருத்துவர்கள் ஓராண்டில் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். போர்க் காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த இடமாற்றம் நடைமுறை தற்போதும் நடைமுறையில் இருக்கின்றது. இதன் காரணமாக வடக்கில் தொடர்ந்தும் மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டினேன்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி கோத்தாபய, வடக்கு மற்றும் கிழக்கு இடமாற்றப்பட்டியலை உடனடியாக நிறுத்துவதாக தெரிவித்ததுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலர் உள்ளிட்டோருக்கும் அதற்குரிய பணிப்புரையை விடுத்தார் என்றார்.

இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு இடமாற்றப்பட்டியலை நிறுத்தியுள்ள சுகாதார அமைச்சு அதற்குப் பதிலாக நாடு முழுவதும் கஷ்டப் பிரதேசங்களுக்கான பட்டியலை அறிமுகம் செய்யவுள்ளது. கஷ்டப் பிரதேசங்களாக அடையாளப்படுத்தும் இடங்களில் நியமனம் பெறும் மருத்துவர்கள் ஓராண்டின் பின்னர் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும். (ஒ.ப.5)

# 'கோட்டாவில்' தெரிவாகும் மாணவர்கள் தங்கள் இடங்களில் பணிபுரியவேண்டும்

## தேசியக் கொள்கையாக்குமாறு ஒருங்கிணைப்புக்குழுவில் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 5

**நாடு முழுவதிலும் மருத்துவர்களுக்கு பற்றாக்குறைகள் இருக்கின்றன. மருத்துவபீடத்துக்கு, மாவட்டங்களுக்குரிய ஒதுக்கீடுகள் (கோட்டா) ஊடாகத் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் எந்த மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டார்களோ அந்த மாவட்டங்களில் கட்டாயம் 2 ஆண்டுகள் சேவையாற்றவேண்டும் என்ற தேசியக் கொள்கை கொண்டு வரப்பட வேண்டும். இதன் ஊடாகவே நாடு முழுவதிலும் உள்ள மருத்துவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் யோசனை முன்வைத்தார்.**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மருத்துவர்கள் பற்றாக்குறை தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சமாதான ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த காலத்தில் சுகாதார அமைச்சராக இருந்தவர் நிமல் சிறிபால டி சில்வா. அவருடனும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடனும் பேசி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் மாணவர்கள் வடக்கு, கிழக்கில் கட்டாயம் இரண்டு ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்ற யோசனையை முன் மொழிந்தோம். அதே போன்று இப்போதும் செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட மருத்துவக்கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் நாடு முழுவதும் உள்ளன. தேசியக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தப்படவேண்டும். இலங்கையிலுள்ள மருத்துவபீடங்களுக்கு தேசிய தரநிலையின் (மெரிட்) அடிப்படையில், மாவட்ட ஒதுக்கீடு (கோட்டா) அடிப்படையில் மாணவர்கள் உள்வாங்கப்படுவார்கள். தேசிய தரநிலையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்கள் எங்கும் பணியாற்றட்டும். ஆனால் மாவட்ட ஒதுக்கீடு அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்கள், எந்த மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்களோ அந்த மாவட்டங்களில் இரண்டு ஆண்டுகள் கட்டாயம் பணியாற்றவேண்டும் என்று தேசியக் கொள்கையில் மாற்றம் செய்யவேண்டும். இதன் ஊடாக நாடு முழுவதிலும் உள்ள மருத்துவர்களின் வெற்றிடங்களுக்கான பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும்- என்றார். (ஒ.ப.5)

# ஆளுநர் முன்மாதிரியாக செய்து காட்டுவாரா?

யாழ்ப்பாணம், பெப். 5

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமரவில்லை என்று கூறும் வடக்கு ஆளுநர், வயாவிளானில் மீளக்குடியமரத் தயாரா? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. மீள்குடியமர்வு தொடர்பான விடயம் ஆராயப்பட்டது.

"மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் வந்து குடியமரவில்லை. இதனால் ஏனைய இடங்களை விடுவிக்குமாறு அழுத்தம் கொடுக்கும்போது இந்த விடயம் எமக்குப் பின்னடைவாக இருக்கின்றன" என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் சுட்டிக்காட்டினார்.

"மக்களின் காணிகள் மக்களுக்குத்தான் கொடுக்கப்படவேண்டும். அவர்கள் வந்து குடிய மர்கின்றார்களோ இல்லையோ மக்களின் காணிகள் மக்களுக்குத்தான்" என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வயாவிளானைச் சேர்ந்த ஒருவர், அந்தப் பகுதி விடுவிக்கப்படவில்லை என்பதையும், அங்கு மீள்குடியமர்வதற்கு தயாராக 400 குடும்பங்கள் உள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார். வலி. வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் உள்ளனர் என்ற மாயையான தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

வயாவிளான் தொடர்பில் அவர் விளக்கமளித்துக் கொண்டிருக்கும்போது குறுக்கிட்ட வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், "நானும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவள். வயாவிளான் பற்றி எனக்கு நன்கு தெரியும். எனது உறவினர்களே அங்குள்ள தங்களின் காணிகளைப் பார்த்துக் கொள்ளுமாறு எனக்குச் சொல்கின்றனர்" என்று குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குறுக்கிட்டு, நீங்கள் வயாவிளானில் சென்று குடியமரத் தயாரா?" என்று கேட்டார். ஆளுநர் சிரிப்புடன் அந்த விடயத்தை முடித்துக் கொண்டார். (ஒ.ப.5)

# சுற்றுலா மையங்களில் மும்மொழி பெயர்ப் பலகைகள்

யாழ்ப்பாணம், பெப்.5

யாழ்ப்பாணம் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இடங்களில் காணப்படும் சுற்றுலா மையங்களில் மும்மொழிகளிலும் பெயர்ப் பலகைகளை அமைக்க பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தீர்மானித்தது. வடக்கு மாகாணத்தில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இடமாக நெடுந்தீவுப் பிரதேசம் காணப்படுகிறது. அங்கு காணப்படும் பிரதான சுற்றுலா மையங்களான பெருக்குமரம், பாதச் சுவடு, குதிரை லாயம், குதிரைகள், புறாக் கூடு, மருத்துவக் கேணி, குயிந்தா கோபுரம், வெடியரசன் கோட்டை என்பவை அபிவிருத்தி செய்யப்பட்டு, அங்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகள் அமைக்கப்படவேண்டும் என்று கூட்டத்தில் கோரப்பட்டது. இது தொடர்பில் வடக்கு மாகாண சுற்றுலா திணைக்களத்திடம் வினவப்பட்டது.

பதிலளித்த அவர்கள் தொல்பொருள் திணைக்களம் அதற்கு அனுமதிக்க வேண்டும் என்றனர். தொல் பொருள் திணைக்களத்திடம் வினவப்பட்டது. குறித்த சுற்றுலா மையங்களின் வரலாறுகளைக் காட்சிப்படுத்துவதற்கே தாங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்று தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார். எனினும் வடக்கு சுற்றுலாத் திணைக்களம், மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியவை இணைந்து இந்தச் சுற்றுலா மையங்களில் மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகளை அமைக்க வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ப-319)

# வீதி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, பெப்.5

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் பெண்ணொருவர் உள்பட இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சரசாலை தெற்கைச் சேர்ந்த ராஜ்நிமால் சிவசுதா (வயது-42), வெற்றிலைக்கேணி முள்ளியானையைச் சேர்ந்த சட்டநாதக் குருக்கள் யோகசம்பந்தக் குருக்கள் (வயது- 34) ஆகியோரே இவ்வாறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ-9)

# ஜெனிவாவைச் சமாளிக்க திண்டாடும் ராஜபக்சக்கள்

## நளின் பண்டார தெரிவிப்பு



**கொழும்பு, பெப். 5**

**ஜெனிவா நெருக்கடியை ராஜபக்சக்களால் உரிய வகையில் கையாள முடியாமல் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: நாடு இன்று பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்றுதான் ஜெனிவா கூட்டத் தொடர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், போர்க்காலம் பற்றி மட்டும் கருத்து வெளியிடப்படவில்லை. நடைமுறைப் பிரச்சினைகளும் பட்டியலிடப்பட்டுள்ளன.

இராணுவ அதிகாரிகளின் நியமனம், நீதிமன்றுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான அடக்குமுறை மற்றும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்த பின்னர் ஐ.நா. செயலாளருடன் இணைந்து அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூட்டறிக்கையொன்றை வெளியிட்டார். அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அவரது ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஜெனிவா சவாலை மஹிந்தவால் எதிர்கொள்ள முடியவில்லை. அதே நிலைமை கோத்தாபய ஆட்சியிலும் தொடர்கின்றது. இந்தப் பிரச்சினையை உரிய வகையில் முகாமை செய்வதற்குத் தெரியவில்லை -என்றார். (க-44)

# நாடு திரும்புவோருக்கு வட்டியில்லாத கடன்



கொழும்பு,பெப்.5

தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று, தற்போது நாடு திரும்பி தொழில் வாய்ப்பற்றுள்ளவர்களுக்கு, ஒரு இலட்சம் ரூபா வரையான உதவித் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க 50 ஆயிரம் ரூபா வரையான வட்டியில்லாக் கடனை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக வழங்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தொழிலை இழந்து நாட்டுக்கு வரும் இலங்கையர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வரை உதவித் தொகை வழங்கப்படும். எனினும் இதனை ஒரு லட்சம் ரூபா வரை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன்.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு சென்ற பணியாளர்களுக்கு, நாடு திரும்பத் தேவையான விமான பயணச் சீட்டைப் பெற்றுக்கொடுக்குமாறும் தெரிவித்துள்ளேன் - என்றார். (க-இ)

# கொரோனாத் தொற்றால் பச்சிளம் குழந்தை சாவு



கொழும்பு, பெப்.5

கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில்கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனாவால் பீடிக்கப்பட்ட 4 மாதங்களேயான குழந்தை 11 நாள்களாக தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கொரோனா ஒழிப்பில் 10 ஆம் இடம்; இலங்கைக்கு கிடைத்த வெற்றி இது!

## மெச்சுகிறார் கெஹலிய



கொழும்பு, பெப்.5

கொவிட் -19 வைரஸ் பரவலை சிறந்த முறையில் கட்டுப்படுத்திய நாடுகளில் இலங்கை 10 ஆவது இடத்தில் இருப்பது எங்களுக்கு கிடைத்த வெற்றியே. இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மேலும், கொரோனா காலத்தில் சுமார் 72 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவி வழங்க ரூபா 80 பில்லியனை அரசு செலவிட்டுள்ளது. வைரஸ் நெருக்கடிக்கு மத்தியிலும், 61 ஆயிரம் பட்டதாரிகள் மற்றும் குறைந்த வருமானம் உள்ள ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வரலாற்றில் முதல்முறையாக, நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள அனைத்து வீதிகளையும் காப்பெற் வீதிகளாக மாற்றும் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்த வருடம் நாடளாவிய ரீதியில் 14 ஆயிரத்து 26 புதிய வீடுகள் அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்படவுள்ளன - என்றார். (ந-இ)

# தொழில் முனைவோருக்காக ரூ. 40 மில்லியன் நிதி ஒதுக்கீடு

கொழும்பு, பெப். 5

இலங்கையிலுள்ள சனச அபிவிருத்தி வங்கிக்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்குவதற்கு அமெரிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும் பெண் தொழில்முனைவோருக்கும் உதவுவதற்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது எனவும், அமெரிக்க அரசின் அபிவிருத்தி வங்கியான அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறப்படும் இந்த கடனுதவியானது, இலங்கையில் தனியார்துறை முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதை நோக்கமாக கொண்டுள்ளது எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ய-இ)

# ரஞ்சன் ராமநாயக்கவின் மனு தள்ளுபடி

கொழும்பு, பெப். 5

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த நகர்த்தல் மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தனக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை மறுபரிசீலனை செய்யும்படி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க உச்சநீதிமன்றில் நகர்த்தல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

எனினும் அதனை விசாரணைக்கு எடுக்காமலேயே நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து, உச்சநீதிமன்றம் கடந்த ஜனவரி 12 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

## மத்திய மாகாணத்தில்

# மீண்டும் நிலநடுக்கம் ஏற்படும் சாத்தியம்

கொழும்பு, பெப்.5

மத்திய மாகாணத்தில் மீண்டும் நிலநடுக்கங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என பேராதனை பல்கலைக்கழகத்தின் புவிச்சரிதவியல் ஆய்வுப்பிரிவின் சிரேஷ்ட பேராசிரியரான அத்துல சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஜனவரி 21ஆம் திகதி வலப்பனை மடுல்சீமை பகுதிகளில் இரண்டு நிலநடுக்கங்கள் பதிவாகி இருந்தமையுடன், கடந்த செவ்வாய்க்கிழமை அதே பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

இதுதவிர, கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி யன்று கண்டி - திகன பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது டன் கடந்த வருடத்தில் மட்டும் அங்கு 7 தடவைகள் நிலஅதிர்வுகள் பதிவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# அரச சேவையில் மேலும் 8,500 பட்டதாரிகள் இணைப்பு



கொழும்பு, பெப்.5

அரச சேவையில் மேலும் 8 ஆயிரத்து 500 பயிலுநர் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதற்சுற்றில் அரச சேவையில் பயிற்சி பெறுவதற்கு தகுதி பெறாத மாணவர்களின் மேன்முறையீடுகளை பரிசீலித்ததன் பின்னரே, மேலும் இந்த நியமனங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

குறித்த பட்டதாரிகளின் நியமனக் கடிதங்கள், அவர்களின் நிரந்தர வதிவிடத்தின் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

# பௌத்த போதனைப்படி நாட்டை நிர்வகிப்பேன்!

## சுதந்திர தின உரையில் கோத்தாபய

கொழும்பு, பெப்.5



**நான் ஒரு சிங்கள பௌத்த தலைவர். அதை வெளிப்படுத்த நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். பௌத்த போதனைகளின்படியே இந்த நாட்டை நிர்வகிக்கின்றேன் என்று தெரிவித்தார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. இலங்கையின் 72ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் காலி முகத் திடலில் நேற்று நடைபெற்றது.**

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அனைத்துச் சமயங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் உரிய கௌரவத்தை அளிக்கும். அஹிம்சையும் அமைதியும் கொண்ட பௌத்த தத்துவத்தில், எமது நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட கட்டமைப்புக்குள் சரி சமமாக சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை உண்டு.

தேசியத்தை மதிக்கும், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் ஒரு தேசிய தலைமைக்கு எதிராக தேசத் துரோக சக்திகள் அணி சேர்ந்து, தங்கள் இலக்குகளை அடைய உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் ஆதரவை நாடுகின்றன. இவர்கள் மிகவும் நுட்பமாக பல்வேறு போலிப் பரப்புரைகள் மூலம் மக்களைத் தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். நாட்டு மக்கள் எப்போதும் விவேகத்துடன் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தரவுகளின் அடிப்படையில் விடயங்களை ஆராய்ந்து உண்மைகளை அறிந்து முடிவுகள் எடுக்கப்பட்டால் எவருக்கும் பொதுமக்களை தவறாக வழிநடத்த முடியாது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இந்த நாட்டில் வாழும் அனைத்துக் குடிமக்களுக்கும் சம உரிமை உண்டு. இன அல்லது மத அடிப்படையில் குடிமக்களைப் பிரிப்பதற்கான முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கிறோம். அனைத்துக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், ஒரே சட்டம் என்ற கொள்கையே எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எப்போதும் எமது நிலைப்பாடு.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தற்போது எனக்குக் கிடைத்துள்ளது. அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். கடந்த நாடாளுமன்றத்தால் இது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு குறித்த கண்காணிப்பு செயற்குழுவின் பரிந்துரைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அதே போன்று இந்த நாட்டில் தீவிரவாதம் மீண்டும் தலைதூக்கவும் நாம் இடமளிக்க மாட்டோம்.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் கொவிட் வைரஸிற்கான தடுப்பூசிகளை வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளன. இந்த தடுப்பூசிகளை விரைவாகப் பெறுவதற்கு இலங்கைக்கு உதவுமாறு இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தலைவர்களிடம் நான் கேட்டுக்கொண்டேன். இந்த விடயம் தொடர்பில் உலக சுகாதார அமைப்புடனும் அரசாங்கம் கலந்துரையாடியது.

உள்ளூர் விவசாயிகளை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த விவசாயிகளை தொழில்முயற்சியாளர்களாக மாற்ற வேண்டும் என்று நான் எப்போதும் கூறியுள்ளேன், நாட்டுக்கு பெரும் அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் ஒரு துறையாக விவசாயத்தை மேலும் மேம்படுத்துவதே எங்கள் நோக்கம்.

பொருளாதார வளர்ச்சியில் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளின் முக்கியத்துவத்தை நாம் மறக்கவில்லை. என்றார். (எ-இ)



## சாக்குச் சாமியாரின் யாத்திரை ஆரம்பம்

மன்னார்,பெப்.5

சுதந்திர தினத்தை முன்னிட்டு, 'சாக்குச் சாமியார்' என அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் கிருஸ்ணன் டயஸ், மன்னாரில் இருந்து கொழும்புக்கான பாத யாத்திரையை நேற்று ஆரம்பித்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் மதத் தலைவர்களின் ஆசியுடன் தனது பாத யாத்திரையை ஆரம்பித்தார்.

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உட்பட அதிகாரிகள் இணைந்து பாதயாத்திரையை ஆரம்பித்து வைத்தனர்.

இந்தப் பாதயாத்திரை சுமார் 40 நாள்கள் இடம் பெறும். தினமும் சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் வரை பாத யாத்திரிகையை அவர் மேற்கொள்வார். செல்லும் வழிகளில் உள்ள முக்கிய மதத்தலங்களில் தரிப்பை மேற்கொள்வார்.


கொழும்பிலுள்ள முக்கிய பௌத்த மதத் தலத்தை அடைந்து தனது பாதயாத்திரையை அவர் நிறைவு செய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் 3 ஆவது தடவையாக மன்னாரில் இருந்து கொழும்புக்கான பாத யாத்திரையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

## கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டை மீறவில்லை

### மருத்துவர் மேந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.5



நாட்டில் கொரோனாத் தொற்று இன்னும் கட்டுப்பாட்டை மீறவில்லை என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். நாட்டில் கொரோனாத் தொற்று முற்றிலுமாகக் கட்டுப்பாட்டுக்குள் வரும்வரை பின்பற்றப்பட்ட அதே சுகாதார வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். கடந்த காலங்களில் வைபவங்கள், திருமண விழாக்கள் மற்றும் மரணச் சடங்குகளால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கொரோனாத் தொற்று பரவியது. இதைக்கருத்திற்கொண்டு அத்தியாவசிய தேவையின்றி இது போன்ற வைபவங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்தியாவசிய தேவையெனில் சரியான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றிச் சென்று வர முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)



## சுதந்திர தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் துப்புரவுப்பணி

சாவகச்சேரி, பெப். 5

சுதந்திர தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனை அலுவலர்களால் நேற்று துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மருத்துவமனை வளாகத்தில் மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மருத்துவர் திருமதி டயாளினி மகேந்திரன் தலைமையில் இந்தத் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. துப்புரவுப் பணிகளைத் தொடர்ந்து மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ம-9)

## 21 குடும்பங்களுக்கு லட்சுமி கரங்கள் உதவி

மன்னார்,பெப்.5

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து 'லட்சுமி கரங்கள்' அமைப்பால், 21 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, உதவித்திட்டங்கள் நேற்று வழங்கப்பட்டன.

நடராசா மாஸ்டர் குடும்பத்தின் பங்களிப்புடன், உலர் உணவுப் பொருள்கள், புடவைகள் மற்றும் 1000 ரூபா பணம் என்பவை வழங்கப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், லட்சுமி கரங்களின் தொண்டர்கள் இணைந்து உதவிகளை வழங்கினர். (க-56)



கிளிநொச்சி, மாசார் அ.த.க. பாடசாலை மாணவ முதல்வர்களு க்கு அண்மையில் சின்னம் சூட்டப்பட்டது. அதிபர் த.ஜெபதாஸ் தலைமையில், பளை கோட்டக்கல்வி அதிகாரி தி.திலீபன் மற்று ஆசிரியர்கள் முன்னி யில் மாணவர்களுக் சின்னம் சூட்டப்பட்டது. (க-15

# போராட்டத்துக்கு ஒத்துழைப்பது அனைவரினதும் தார்மீகக் கடமை

யாழ்ப்பாணம், பெப். 5

**தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் அநீதி இழைக்கும் அரசுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்களுக்கு பரிபூரண ஒத்துழைப்பை நல்கி, தமது உணர்வுகளை அமைதியான முறையில் வெளிப்படுத்துவது எமது மக்களின் தார்மீகக் கடமை என்று யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்தார்.**

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:

ஆயுதப் போராட்டம் நடைபெற்றபோது, "ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வரும்வரை தீர்வைக் கொண்டுவரமுடியாது" என்று அரசு கூறியிருந்தது. தற்போது ஆயுதப் போராட்டம் மௌனித்து ஒரு தசாப்தத்தைக் கடந்துவிட்ட நிலையில், ஆக்கபூர்வமான ஏதாவதொன்றைச் செய்துவிட்டோம் என்று அரசால் பகிரங்கப்படுத்த முடியுமா? இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. அந்த இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. புத்தபகவான் எப்போதாவது தனக்குச் சிலைவைக்குமாறு கூறினாரா? பௌத்த தர்மங்களைப் புறமொதுக்கிவிட்டு புத்தர் சிலை களையும் விகாரைகளையும் நிர்மாணிப்பதால் ஒருபோதும் பௌத்தனாகிவிடமுடியாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அநீதிக்கு எதிராக துணிந்து நிற்க வேண்டும் என்றே அனைத்து மதங்களும் கூறுகின்றன. இந்து மதத்துக்கு எதிராகத் தொடரும் வன்முறைகள் பௌத்தர்களை இருண்ட யுகத்துக்குள் அழைத்துச் செல்கின்றன என்பதை காலம் ஒருநாள் நிரூபித்தே தீரும். - என்றுள்ளது. (த-இ)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 18 . 03 . 1954

இறப்பு 29 . 01 . 2019

அமரர்

**கந்தசாமி ஸ்ரீகாந்தன்**

கண்ணிமைத்து விழிக்கவில்லை
இரண்டு ஆண்டுகள் சென்றுவிட்டதப்பா
ஒரு நொடிப்பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம் எம்மைவிட்டு....

"லக்சுமி பேக்கரி"
ஆறுகால் மடம், மானிப்பாய் வீதி

தகவல்
குடும்பத்தினர்

## யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

**R.I.B Group (Pvt) Ltd**

நிறுவனத்தில்.

* கணக்காளர்: (Accountant) (குறைந்தது ஒரு வருட அனுபவம்)
* சாரதி: (Driver- Heavy Vehicle)

வயது: 25 - 40

குறிப்பு: உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்கவும்.
நேர்முகத்தேர்வு: 06.02.2021 சனிக்கிழமை
நேரம்: காலை 10.30 - மதியம் 12.30 வரை
இடம்: இல. 83, காதிஅபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு இல:
**077 3883879, 076 1389356**

## வேலையாள்கள் தேவை

சமையலாளர், சமையல் உதவியாளர், வரவேற்பாளர் (இரவு) ஆண்/பெண் இருபாலாரும்
ஞானம்ஸ் ஹோட்டல்
301, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 630 9947
076 222 0632

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தனிக் குடும்பம் ஒன்றிற்கு சமையல் வேலைகள் செய்வதற்கு பணிப் பெண் தேவை.

**076 009 4946**

## கணக்காளர் தேவை

முன் அனுபவமுள்ள பெண் கணக் காளர் தேவை. வயது 25 தொடக்கம் 40 வரை உள்ளவர். கணனி அறிவு விரும் பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
**0775833045, 0777808954**

## ஆங்கில ஆசிரியர் தேவை

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளிக்கு ஆங்கில ஆசிரியர் தேவை.

தொடர்பு:
**0773867458, 0212216933**

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பொதிகள் சேவை நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 386 6250**


## பெறுகை அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## முன்பள்ளிகளுக்கான கொவிட் - 19 பாதுகாப்பு செயற்திட்டம் - 2021

01. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை,14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், சபையின் அதிகார எல்லைக் குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு Covid– 19 தொற்றுநோய் தடுப்பிற்கான பாதுகாப்பு பொருட்கள் வழங்கல் திட்டத்திற்காக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதிவாய்ந்த வழங்குனர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்களுக்காக கோருகின்றது.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List)சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான வியாபாரப் பெயர்ப்பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், (தொலைபேசி, இலக்கங்கள் 021-222-2700,பக்ஸ் இல. 021-222-0138 e.mail – npsnallur@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள லாம். அத்துடன் 05.02.2021 திகதியிலிருந்து 18.02.2021 ம் திகதிவரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை நல்லூர் பிரதேச சபை,14/5 கருவப்புலம் வீதி,கொக்குவில் எனும் இடத்திலிருந்து 05.02.2021 ம் திகதியிலிருந்து 18.02.2021 ம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக் கப்படாத கட்டணமாக ரூபா 1000/- (வரிநீங்கலாக) செலுத்திபெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கைக் கடிதத்துடன் வியாபாரப் பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதியும் சமர்ப்பிக்கவேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** எனும் முகவரிக்கு 19.02.2021 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதி நிதிகள் முன்னிலை யில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியைமட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 60 (அறுபது) நாட்கள் (20.04.2021) வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | பொருள்விபரம் | தேவையான அளவு | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41/(10)/Acc/ Proc/Covid-19 Prevention Goods-2021 | Digital Thermometer | 26 | 15 நாட்கள் | 10,000.00 | 18.05.2021 |
| | Liquid HandWash – 500 ML | 208 | | | |
| | Sanitizer – 500 ML | 104 | | | |
| | Chlorine Powder -1 KG Packet | 52 | | | |
| | Detol Soap – 75 Gram | 130 | | | |
| | First Aid Box with Medicines | 26 | | | |
| | Paper serviette – 100 Papers Bundle | 650 | | | |
| | Baby Mask | 34,800 | | | |

**ப.மயூரன்**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**
**05.02.2021**


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 05 . 1932

மறைவு 05 . 02 . 2011

திருமதி

**நீற்றா சுகிர்தம் யோண்**

(முன்னாள் முகாமையாளர் யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்கம் - யோன் அன்ரி, பேபி அன்ரி)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள் "

சிறுவயதில் தந்தையை இழந்த எம்மை
நல்வழி காட்டி நல்ல கல்லூரியில்
- கல்வி அறிவோடு
ஆங்கில அறிவையும் ஊட்டி
எம்மை நல்ல நிலைக்கு உயர்த்திய தாயே!
தொழிற்சங்கவாதியாகவும், பல சமூக
- சேவையாளியாகவும் இருந்த
எமது அன்புத்தாய் மறைந்து 10 ஆண்டுகள்
- சென்றாலும்
மறந்திட மாட்டோம் நாம்.

*என்றும் உங்கள் நினைவுகளுடன்:*
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,**
**அன்ரன் கிளஸ்ரர் யோண்**
(ஓய்வுபெற்ற முகாமையாளர் - மக்கள் வங்கி),
67, சென்யோன்ஸ் வே, கொழும்பு - 15
(011 252 6879),
**கெக்ரர் கேமன் யோண்**
(ஓய்வுபெற்ற பாதுகாப்பு பரிசோதகர் - யாழ். கல்கலைக்கழகம்,
கெக்ரர் ( B 1/2 அலுத்மாவத்தை தொடர்மாடி, கொழும்பு-15) 011 254 0142, 077 601 1625

# வடக்கு அரச அலுவலகங்களில் சுதந்திரதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 5
வடக்கு மாகாணத்தில் மாவட்டச் செயலகங்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அரச அலுவலகங்களி லும், நீதிமன்றங்களிலும் நேற்று இலங்கையின் சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது. சுதந்திர தினக் கொடியேற்றலுடன் வேறுசில நிகழ்வுகளும் இடம்பெற் றன.

## யாழ். மாவட்டச் செயலகம்



இலங்கையின் 73ஆவது சுதந்திர நிகழ்வுகள் யாழ்ப் பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற் றன. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் கணபதிப் பிள்ளை மகேசன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. தேசியக் கொடியை நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநா தன் ஏற்றிவைக்க, தொடர்ந்து தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

## வவுனியா மாவட்டச் செயலகம்



வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வவு னியா நகர சபை மைதானத்தில் நேற்று சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. முப்படையினரின் பங்கு பற்றலுடன் நிகழ்வுகள் நடைபெற்றன.

## மன்னார் மாவட்டச் செயலகம்



இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் இடம் பெற்றன. சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் நிகழ் வுகள் இடம்பெற்றன. முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். அதைத் தொடர்ந்து தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து சர்வ மதத் தலை வர்களாலும் விருந்தினர்களாலும் வெள்ளைப்புறா பறக்க விடப்பட்டது.
அதனைத்தொடர்ந்து நிகழ்வுகளில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் சர்வமதத் தலைவர்கள் ஆகி யோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. மாவட்டச் செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட மூலிகைத் தோட்டம் திறந்து வைக்கப்பட்டதோடு, மர நடுகை நிகழ்வுகளும் தொடர்ந்து இடம்பெற்றன.

## கிளி. மாவட்டச் செயலகம்



வட மாகாண ஆளுநர் கலந்துகொண்ட சுதந்திர தின நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளி நொச்சி மாவட்டச் செயலகத்தில் குறித்த நிகழ்வு நேற் றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது. ஆளுந ரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, தமிழ் மற்றும் சிங் கள மொழிகளில் தேசியகீதம் இசைக்கப்பட்டது.
அதனைத் தொடர்ந்து மதத் தலைவர்களின் ஆசி யுரை இடம்பெற்றதையடுத்து வடமாகாண ஆளுநர் உரையாற்றினார். குறித்த நிகழ்வில் மதத் தலைவர் கள், கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ் வரன், பொலிஸ் உயர் அதிகாரிகள், முப்படையினர், திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 73ஆவது சுதந்திர தினத்தையொட்டி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் மாவட்டச் செயலர் க.விமலநாதனின் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றன.
இதன்போது மாவட்டச் செயலரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டின் விடுதலைக்காக உயிர் நீத்தவர் களுக்காக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. சுதந்திர தினத்தை முன்னிட்டு மாவட்டச் செயலக வளாகத்தில் மர நடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

## கரைச்சி பிரதேச செயலகம்



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றன. பிர தேச செயலர் செ.சண்முகதாசன் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து மரக்கன்றுகளும் நடப் பட்டன.

## மன்னார் மாவட்ட நீதிமன்றம்



இலங்கையின் 73ஆவது சுதந்திர தினத்தை முன் னிட்டு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மற்றும் நீதிமன்றப் பணியாளர்கள், அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்ட நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றி மரியாதை செலுத் தப்பட்டது.

## தென். பிரதேச செயலகம்



நாட்டின் 73ஆவது தேசிய சுதந்திர தினத்தையொட்டி தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று தேசியக் கொடியேற்றுதல், மரக்கன்றுகள் நடுகை மற்றும் சிரமதானம் என்பவை இடம்பெற்றன.
பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம் தலைமை யில் நிகழ்வுகள் இடம்பெற்றன. அவர் காலை 8 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து 9.30 மணியளவில் பயன்தரு மரங்கள் நடப்பட்டன.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு 5,300 மரக்கன்றுகள் நடப்பட்டன



நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் 5 ஆயிரத்து 300 மரக்கன்றுகள் நேற்று நடப்பட்டன. வவுனியா நகரசபை மைதானத்தில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் மற்றும் மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன ஆகி யோர் இணைந்து மரமொன்றை நட்டு இந்தத் திட் டத்தை ஆரம்பித்து வைத்தனர்.
அதனைத் தொடர்ந்து காமினி மகாவித்தியாலய மைதானம், பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் பிரிவுகள், பாடசாலைகள், வலயக் கல்வித் திணைக் களம் உள்ளிட்ட இடங்களில் மரநடுகை இடம்பெற் றது. (ம-19,56,60,213,9,110,6,20)

# மின்சார இணைப்புக்காக காத்திருக்கும் இந்திராபுரம்

பளை, பெப்.5

**பளை, இந்திராபுரம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 27 நிரந்தர வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழுங்குதில் காலம் தாழ்த்தப்பட்டு வருகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இந்தப் பகுதியில் 2019ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். அங்கு குடியமர்ந்த 27 குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தால் தலா 10 லட்சம் ரூபா செலவில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டன. கடந்த ஆண்டும் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு, பல காணிகள் அந்தப் பகுதியில் விடுவிக்கப்பட்டிருந்தன. சுமார் 100 குடும்பங்களுக்கு மேல் அங்கு மீள்குடியமர்ந்துள்ளனர். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனம் மற்றும் இந்திய றஹமா நிறுவனம் என்பவற்றால் தலா 50 ஆயிரம் ரூபா செலவில் தற்காலிக வசிப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் இந்தக் கிராமத்துக்கான மின்வழங்கல் கம்பங்கள் நடப்பட்டு, வயர்களும் பொருத்தப்பட்டிருந்தன. கடந்த ஓகஸ்ட் மாதம் தற்காலிக வசிப்பிடங்களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. எனினும் நிரந்தர வீடுகளுக்கு இதுவரை மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 160 குடியிருப்புக்கு இலவச மின் இணைப்பு வழங்க அரசு நிதி ஒதுக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட போதும், இதுவரை மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் கேட்டால், நிரந்தரக் குடியிருப்புகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்குவதற்கான நிதி இலங்கை மின்சார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர்.

இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி அலுவலகத்திடம் கேட்டால் இலவச மின்சாரம் வழங்குவதற்கான நிதி தங்களுக்கு கிடைக்க வில்லை என்கின்றனர்.

இதில் எது உண்மை என்று தெரியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)



தேசிய பாரம்பரிய

# இடைக்கால அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு

கொழும்பு, பெப். 5

இலங்கையின் தேசிய பாரம்பரியத்தைத் தீர்மானிக்கவும், அடையாளம் காணவும் ஒரு வழிமுறையை அறிமுகப்படுத்துவது தொடர்பான இடைக்கால அறிக்கை, குழுவின் உறுப்பினர்களால், பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கைக்கு அமைய முன்வைக்கப்படும் முன்மொழியப்பட்ட வழிமுறைகள், பொது மக்களின் கருத்துக் கோரல்களுக்காக எதிர்வரும் 8 ஆம் திகதி நாளிதழ்களில் பகிரங்கமாக வெளியிடப்படவுள்ளது.

தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் அறிக்கையைக் கை யளித்தனர் என்று பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு ரஷ்யா இலங்கைக்கு வாழ்த்து!

கொழும்பு, பெப்.5

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா ரஷ்யா சார்பில் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ரஷ்ய-இலங்கை இருதரப்பு உறவுகள், அவை நிறுவப்பட்டதிலிருந்து தொடர்ந்து ஆக்கபூர்வமாகவே இருக்கின்றன. நாங்கள் அரசியல் தொடர்புகளை மிக உயர்ந்த மற்றும் உயர் மட்டங்களில் பராமரிக்கிறோம்.

மேலும் சர்வதேச அரங்கில், ஐ.நா மற்றும் பிற பலதரப்பு தளங்களில் உற்பத்தி ரீதியாக ஒத்துழைக்கிறோம். ரஷ்யா பாரம்பரியமாக இலங்கையின் ஒரு முக்கிய வர்த்தக பங்காளியாகவும், இலங்கைத் தேயிலையின் மிகப்பெரிய இறக்குமதியாளர்களில் ஒருவராகவும் இருந்து வருகிறது.

நாட்டின் காட்சிகள் பாரம்பரியமாக ஏராளமான ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. இயற்கையாகவே, கொரோனா வைரஸ் தொற்று நிலைமையை மாற்றி விட்டது.

எமது இலங்கை நண்பர்களுக்கு அவர்களின் தேசிய தினத்தன்று உங்களுக்கு மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்பு உண்டாக வாழ்த்துகின்றோம் - எனத் தெரிவித்துள்ளார் (ற-இ)



இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தால் பொருண்மியம் நலிந்த மாணவர்களுக்கு சுவிற்சர்லாந்தில் வசிக்கும் நிறுவன பழைய மாணவர் ஒருவரின் நிதிப் பங்களிப்பில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் இரா.செல்வவடிவேல் சைக்கிள்களை வழங்கினார். (ச)

# லூர்து அன்னை திருவிழா இம்முறை நடக்காது!

யாழ்ப்பாணம், பெப்.5

நாட்டில் தற்போது காணப்படுகின்ற அசாதாரண நிலைமை காரணமாக, மாதகல் கெபி லூர்து அன்னைத் திருவிழா இந்த வருடம் நடைபெறாது என்று ஆலயத்தின் பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (ற)

# வங்கிக் கடனைச் செலுத்த கசிப்பு விற்றவர் சிக்கினார்

சாவகச்சேரி, பெப்.5

வங்கியில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக கசிப்பு உற்பத்தி செய்து விற்ற ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மீசாலை மேற்கில் நடந்துள்ளது.

சாவகச்சேரி மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு கசிப்பு உற்பத்தி தொடர்பான தகவல் ஒன்று கிடைத்திருந்தது. அதையடுத்து மீசாலை மேற்கில் உள்ள பற்றைக்காட்டுப் பகுதி ஒன்றை அவர்கள் சுற்றிவளைத்தனர்.

அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து பெருமளவு கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர். "தான் வங்கியில் பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்த வழி தெரியவில்லை. அதனால் கசிப்பு உற்பத்தி செய்து விற்றேன்" என்று அவர் தெரிவித்துள்ளார். (க-9)

# அபிவிருத்தித் திட்ட மீளாய்வு : ஆர்வமுடையோருக்கு அழைப்பு


யாழ்ப்பாணம், பெப்.5

கடந்த 2019ம் ஆண்டில் நல்லூர்பிரதேசபையால் தயாரிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தில் மீளாய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வமுடையோருடனான கலந்துரையாடலுக்கு நல்லூர் பிரதேசசபையின் தவிசாளரால் அழைப்பு விடுக்கப்பட்டு ள்ளது.

இதற்கமைய பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, பி.ப.3.30 மணிக்கு கோண்டாவில் மத்தி தில்லையம்பதி சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் 2ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், யாழ்.கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையில் 3ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயத்தில் 4ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் 6ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் 7ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், திருநெல்வேலி முத்துதம்பி மகா வித்தியாலயத்தில் 8ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை பி.ப.3.30 மணிக்கு கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய திருமறை மண்டபத்தில் முதலாம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், கொக்குவில் பிடாரி அம்மன் மண்டபத்தில் 5ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் 9ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் 10ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், அரியாலை ஜெயபாரதி சனசமூக நிலையத்தில் 11ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும், நாவலடி உதய ஒளி முன்பள்ளியில் 12ஆம் வட்டாரத்துக்கான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## மரண அறிவித்தல்



### கந்தசாமி குணரத்தினம்

**(ஓய்வுபெற்ற மேலதிக மாவட்ட பதிவாளர், கச்சேரி - யாழ்ப்பாணம்)**

சங்கரத்தையை பிறப்பிடமாகவும், மலேசியா, வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குணரத்தினம் நேற்று (04.02.2021) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கா.கந்தசாமி தங்கம்மா (பாக்கியம்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் (ஓவசியர்) தனலட்சுமிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், ரவீந்திரன் (UK), காலஞ்சென்ற பாலேந்திரன், யமுனா (பிரான்ஸ்), சேகரன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஸ்குமாரி (UK), வரணராசா (பிரான்ஸ்) அகல்யா (UK) ஆகி யோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தையல்நாயகி, குலரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற Dr. பசுபதிராஜா, தர்மலிங்கம் (பரஞ்சோதி) காலஞ் சென்ற சிவசோதிராசா, காலஞ்சென்ற கனகமணி, ஜெயலட்சுமி (கனடா), செல்வராஜா (அவுஸ்திரேலியா) த.வசந்தா (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜீவன் (UK), மித்திரன் (UK), கரிஸ் (பிரான்ஸ்) அபிலாஸ் (பிரான்ஸ்), அஸ்மிகா (UK), சேஜகா (UK) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2021 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

மலர்வு
14 . 04 . 1937



உதிர்வு
04 . 02 . 2021

### திருமதி குருநாதபிள்ளை தங்கம்மா

உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குருநாதபிள்ளை தங்கம்மா நேற்று (04.02.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதபிள்ளையின் அன்பு மனைவியும் கணேஸ், இராசமலர், ரேவதி, நந்தகுமார் (ஜேர்மனி), ரதி (ஜேர்மனி), கமலாதேவி, விமலதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராணி, பால சுப்பிரமணியம், மாலதி (ஜேர்மனி), ஜெயபாலன் (ஜேர்மனி), சத்திய லோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், றஜிதா (ஆசிரியை), யசிதா (ஆசிரியை), றஜனி (ஆசிரியை), சிவதர்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), கபிலன் (வைத்தியர்), தேன்மொழி, கஜேந்திரன், சுவேந்திரன், சௌமியா, சிந்துஜன், நிதர்சன், நாவேந்தன், லிங்கேஸ்வரன், தாமிரவதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷயா, அக்ஷரா, யாஷரன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2021) வெள்ளிக்கிழமை முற் பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாளடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோண்டாவில் வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 8759 495**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பிள்ளையம்மா



பிறப்பு
14.08.1946

இறப்பு
03.02.2021

யாழ் அம்மன் வீதியை பிறப்பிடமாகவும் இல.70 (100) பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணத்தை வசிப் பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பிள்ளையம்மா நேற்று முன்தினம் (03.02.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சுப்பிரமணியம் (மெக்கானிக்) அவர்களின் அன்பு மனைவியும், நீதிராசா (ஆசிரியர்), சிறிஸ்காந்தராசா, சுசிலா (கனடா), ஜெயராசா, விஜயராசா, மாலினி, காமினி (பிரதேச செயலகம்- வேலணை) ஆகியோரின் தாயும், சாந்தலிங்கம் (கனடா), ஜெயராசா, ஜெயாலினி, பத்மாவதி, சுபோதினி, கலைவாணி, ஜனனி (பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும், டினோஷன், தனுஷன், தனுஜா, நீதிகா, நீருஷன், டிலுஜன், பர்மிளா, கஜானன், நாவேந்தன், றட்சிதன், ஹேசியன், மிகாரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன்- சிறிஸ்கந்தராசா**
**0777 110 119**
**விஜயராசா - மகன்**
**சந்நிதி முருகன் வேக்சொப்**
**அன் சேவிஸ்**
**077 201 8275,**

**இல.70(100),**
**பருத்தித்துறை வீதி,**
**ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**



# மற்றொரு மருத்துவரும் கொரோனாவால் உயிரிழப்பு

நெவில் பெர்னாண்டோ போதனா மருத்துவமனை மற்றும் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய நிறுவனம் ஆகியனவற்றின் நிறுவுநர் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ (வயது89) கொரோனாவால் உயிரிழந்துள்ளார். இலங்கையில் கோவிட் 19 நோயால் இறந்தவர்களில் இரண்டாவது மருத்துவர் இவராவார். (த-இ)

## திருமணத்துக்கு சென்றோரை துரத்திக் கொட்டின குளவிகள்

வவுனியாவில் திருமண மண்டபம் ஒன்றுக்கு அருகில் காணப்பட்ட குளவிக்கூட்டிலிருந்த குளவிகள் கலைந்து தாக்கியமையால், சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் உட்பட திருமண நிகழ்வில் கலந்து கொண்ட மூவர் பாதிக்கப்பட்டனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா, இறம்பைக்குளம் பகுதி கோவில் ஒன்றுடன் அமைந்துள்ள திருமண மண்டபத்தின் அருகில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

குறித்த மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள் சிலரை இதற்கு முன்னரும் பல தடவைகள் குளவிகள் தாக்கியிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-18)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

கொழும்பு, ஜன. 5

இலங்கையின் சுதந்திரதினமான நேற்று கொழும்பில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு வெல்லம்பிட்டிய - வெலேவத்த பிரதேசத்தில் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (த-இ)


### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தேர்தல் கிளையில்
உதவித்தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றும்
திரு இ.கி.அமல்ராஜ் அவர்களின் பாசமிகு தந்தையார்

**திரு மிக்கேல்பிள்ளை விக்ரர் இராஜேந்திரம்**

அவர்கள் நேற்றைய தினம் (04.02.2021) இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பணம்.

### கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 14.08.1946
இறப்பு 03.02.2021

எமது பாடசாலை ஆசிரியர்
**திரு.சு.நீதிராஜா**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி**
**பிள்ளையம்மா சுப்பிரமணியம்**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
ஆனைக்கோட்டை.

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்மடியில் 20.08.1968
மலர் மடியில் 09.02.2018

**அமரர் இராசேந்திரம் புவன்ராஜ்**
(கூட்டுறவுப் பரிசோதகர் - யாழ்ப்பாணம்)

வாழ்வில் எமதினிய வசந்தம்
அழிந்து விட்ட காலக்கொடுமையின்
காரணத்தை நாமறியோம் என்றுமே
உங்கள் நாமம் எமதுயிரே நெஞ்சிருத்தி
கண்ணீர் மலர்களினால்
காணிக்கை செய்கின்றோம்.

என்றும் அன்புடன்
மனைவி, பிள்ளைகள்.

### மரண அறிவித்தல்



**இராசநாயகம் சோதிநாதன்**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட இராசநாயகம் சோதிநாதன் (பாபு) அவர்கள் 31.01.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசநாயகம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நரேந்திரன் பாஸ்கரதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பாலகௌரியின் அன்புக் கணவரும், கௌரிசங்கர், பாலமுரளி, மைதிலி ஆகியோரின் அன்புத் தந்தையும், சஞ்சித்தின் அன்பு மாமனாரும், கதிர்காமநாதன், விமலாதேவி, காலஞ்சென்ற விஜயகுமாரி, சற்குணநாதன், சிவகுமாரி, உத்தமநாதன், அகிலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருந்தவராணி, தர்மலிங்கம், இராஜேந்திரா, புஸ்பாவதி, மகாலிங்கம், லீலாவதி, ஜெயந்தி, நரேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆர்த்திகாவின் அன்புச் சித்தப்பாவும், ரவிசங்கர், பாலசங்கர், சங்கீதா, மேனகா, துளசிகன், துவாரகன், பிரதாபன், தீபா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், சிவாசங்கர், அபிராமி, கிருசாந்தி, சக்திதரன், அரவிந்தன், நிஷாந்தி, உமாகரன், உமையான் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
இராஜேந்திரா சக்திதரன்
மருமகன்
076 870 6711

### மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 10 . 1965
இறப்பு 04 . 02 . 2021



**தம்பிராஜா பாலகஸ்கர் (பாஸ்கரன்)**

யாழ்ப்பாணம் கொட்டடியை பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பிராஜா பாலகஸ்கர் அவர்கள் நேற்று (04.02.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான இரட்ணம் பரமேஸ்வரி தம்பதியரின் அருமை மிகு மருமகனும், இராஜேந்தினியின் (கிளி) ஆருயிர்க் கணவரும், குகன்யா (செலிங்கோ லைப்) அவர்களின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன் (ஜேர்மனி), பவானி (கனடா) ஜெகதீஸ்வரன், விக்னேஸ்வரன், தங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரவிக்குமார், வானதி, ரோசா, நளினி, இராஜசிறி, ரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (05.02.2021) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 074 194 3035

### மரண அறிவித்தல்



கலைஞானசுடர்
**V.K. சண்முகராஜா**
(இளைப்பாறிய கிராம சேவகர்,
இளைப்பாறிய ஆசிரியர், மூத்த நாடக
கலைஞர், சமூக சேவையாளர்,
புல்லாங்குழல் வித்துவான்)

தோற்றம் 27. 07. 1922
இறப்பு 03.02.2021

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சண்முகராஜா நேற்றுமுன்தினம் (03-02-2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04-02-2021) வியாழக்கிழமை 604, நாவலர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, மாலை 3 மணியளவில் அரியாலை சிந்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
பாலாம்பிகை சண்முகநாதன் +942 122 16836
மேனகா தங்கராஜா +947 728 26707

தகவல்:
குடும்பத்தினர்

## தெற்கில்...

இலங்கை அரசின் தேசிய சுதந்திர நாள் நிகழ்வுகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றுப் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டன. அதேவேளை தென்னிலங்கையில் மக்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பாகவும், வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் இலங்கையின் தேசியக் கொடியைப் பறக்க விட்டிருந்தனர். வாகனங்களிலும் இலங்கையின் தேசியக் கொடி கட்டப்பட்டு இருந்தது.

ஆனால் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசின் சுற்றறிக்கைக்கு அமைவாக அரச திணைக்களங்களில் இலங்கையின் சுதந்திர நாள் நிகழ்வுகள் நடைபெற்றன. அதேவேளை இலங்கையின் சுதந்திர நாளை 'கரிநாளாக' அறிவித்த, பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

கறுப்பு உடைகளை அணிந்து, கறுப்புக் கொடிகளுடன் அவர்கள் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். இதேவேளை, பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியும் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது. (ஒ.5)

## தடைகளால்...

பட்டிருந்தன. தடைகளைக் கண்டு அஞ்சாமல் - முடங்காமல் வீறு கொண்டெழுந்து நேற்றைய நாள் அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். இலங்கையின் சுதந்திர நாளை 'கரிநாளாக' அறிவித்து அவர்களின் போராட்டங்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் இடம்பெற்றன. (ஒ)

(விரிவு - பக்:3)

## தமிழர்...

நீதி கோரியும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தொடர் போராட்டத்தின் இரண்டாவது நாள் பேரணி நேற்று பெருமளவிலான மக்களின் நேரடி ஆதரவுடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் தடைகளைத் தாண்டி அம்பாறை மாவட்டத்தை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகக் கடந்து மட்டக்களப்பு தாழங்குடாவில் தரித்து நின்ற பேரணி, நேற்றுக் காலை தாழங்குடா தேவாலயத்திலிருந்து மீண்டும் ஆரம்பமானது.

நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்பு மாவட்டத்தை வெற்றிகரமாகக் கடந்த பேரணி, மாலை தமிழர் தலைநகரான திருகோணமலை மாவட்டத்தில் கால் பதித்தது. திருகோணமலை குமாரபுரத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

திருகோணமலை சிவன் கோயிலடியில் இரவு 8 மணியளவில் வந்தடைந்த பேரணி மூன்றாம் நாளான இன்று காலை முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. மணலாறு வழியாக முல்லைத்தீவு மாவட்டத்தை பேரணி வந்தடையும்.

இன்று நண்பகலை அண்டி முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவர் அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் மதத் தலைவர்கள் இணைந்து பேரணி வரவேற்கப்பட்டு பேரணியோடு இணைந்து தொடர்ந்து முல்லைத்தீவு நகரம் நோக்கிச் செல்லவுள்ளனர். (ஒ.22)

## அலையெனத்...

யில் இணைந்து அமோக ஆதரவு வழங்கினர். மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் காத்தான்குடி, ஓட்டமாவடி, கிண்ணியா, மூதூர் பிரதேசங்களில் முஸ்லிம் மக்களும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் பெருமளவில் திரண்டனர். 'இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து 73 ஆண்டுகளாகியும் தமிழ், முஸ்லிம் மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை. ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் உடன் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசு பொறுப்புக்கூற வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்கள் மீது அரசு மேற்கொண்ட அநீதிகளுக்கு சர்வதேசம் நீதி வழங்க வேண்டும்' என்று விண்ணதிரக் கோசங்களை எழுப்பினர்.

இரு சமூகங்களையும் ஒன்றிணைக்கும் பிள்ளையார் சுழிதான் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான அமீர் அலி தெரிவித்தார்.

இதேவேளை, கிண்ணியாவில் நேற்று மாலை பேரணியில் வந்தோரை வரவேற்று நிகழ்வொன்று நடைபெற்றது. முஸ்லிம்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பும் கலந்து கொண்டு நீதிக்கான பேரணியை வரவேற்று உரையாற்றினார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரான முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்பும் அவரின் ஆதரவாளர்களும் நேற்று இந்தப் பேரணியில் இணைந்துகொண்டு ஆதரவு வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ.22)

## பேரணி...

தினம் ஞாயிற்றுக்கிழமையே யாழ்ப்பாணத்தை வந்தடையக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பேரணி வருகின்ற இடங்களில் மக்கள் அமோக ஆதரவு வழங்குகின்றனர். சில இடங்களில் பேரணி நிறுத்தப்பட்டு கூட்டங்களும் இடம்பெறுகின்றன. இதன் காரணமாகவே முன்னர் திட்டமிட்டவாறு யாழ்ப்பாணத்தை பேரணி நாளை வந்தடையாது என்று கூறப்படுகின்றது. (ஒ.5)

## பௌத்த....

வேளை, நான் ஒரு சிங்கள பௌத்த தலைவர் என்பதை வெளிப்படுத்த ஒருபோதும் தயங்க மாட்டேன். பௌத்த போதனைகளின்படியே இந்த நாட்டை நிர்வகிப்பேன். பௌத்த தத்துவம் அனைத்து மதங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் நடைமுறையில் உள்ள சட்ட கட்டமைப்புக்குள் சரி சமமாக சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமையை உறுதிப்படுத்துகிறது. தேசியத்தை மதிக்கும், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் ஒரு தேசிய தலைமைக்கு எதிராக தேசத்துரோக சக்திகள் அணி சேர்ந்து, தங்கள் இலக்குகளை அடைய உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் ஆதரவை நாடுகின்றன. இவர்கள் மிகவும் நுட்பமாக பல்வேறு போலிப் பரப்புரைகள் மூலம் மக்களை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர், என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார். (ஒ)

(விரிவு- பக்:13)

## பேரணியில்....

வரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

'முஸ்லிம் சமூகமும் கோத்தாபய அரசின் நெருக்கடிகளை இன்று எதிர்கொள்கின்றது. இந்த நிலையில் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் முஸ்லிம்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இன்று மதியம் 12 மணியளவில் பேரணி வவுனியாவை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வவுனியா கொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள தினச் சந்தைக்கு முன்பாக அனைத்து முஸ்லிம் உறவுகளும் திரளவேண்டும்' என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வவுனியா நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி மற்றும் முகமது லறீப் ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ.110)

## இலங்கையை...

படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை ஐ.நா. இடைநிறுத்த வேண்டும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் அறிக்கை, அமைதிப்படையில் பணியாற்றுவதற்காகத் தெரிவு செய்யப்படும் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா என்பதை ஆராய்ந்து உறுதி செய்யக்கூடிய நிலையில் ஐ.நா. தலைமையகமான நியூயோர்க் இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கைப் படையினரை அமைதிப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டிய சட்டரீதியான கடமை ஐ.நா. அமைதிப் பணிகளுக்கான திணைக்களத்துக்குள்ளது எனவும் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். (ஒ.இ)

## யாழில்...

இலங்கை சுதந்திர நாள் பேரணியை சிறு குழுவினர் நேற்று நடத்தினர். பேரணியின் நிறைவில் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர பங்கேற்று விளக்கேற்றிவைத்தார்.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்று வட்டத்தில் ஆரம்பமான பேரணி கோட்டையைச் சுற்றி கே.கே.எஸ். வீதியில் பயணித்து சத்திரச் சந்தியால் மருத்துவமனை வீதியால் பயணித்து மகாத்மா காந்தி வீதியூடாக யாழ்ப்பாணம் பொது நூலகத்தை வந்தடைந்தது.

தமிழ் மக்களின் எழுச்சிப் போராட்டங்களுக்கு கொரோனாவைக் காரணம் காட்டி நீதிமன்றங்களில் பொலிஸார் தடை உத்தரவுகளைப் பெற்றிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

## சுதந்திரக் கட்சியின்...

இலங்கையின் சுதந்திர நாள் பேரணியில் பங்கேற்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மற்றொருவர் தப்பி ஓடியுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் வாள்வெட்டுக் குழு உறுப்பினர் எனவும், வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிறு குழுவினரால் யாழ்ப்பாண நகரில் இலங்கையின் சுதந்திர நாளை முன்னிட்டு இலங்கையின் தேசியக் கொடிகளை ஏந்தியவாறு பேரணி இடம்பெற்றது. இந்தப் பேரணியில் கலந்து கொண்ட ஒருவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார். அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தன்னை 'ஆவாக்' குழுவைச் சேர்ந்தவர் என்று கடந்த காலத்தில் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் இந்தப் பேரணியில் பங்கேற்ற இருவரை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்ய முயன்றனர். அவர்களில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். மற்றையவர் தப்பி ஓடிவிட்டார். இவர்கள் இருவரும் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கூறும் பொலிஸார், வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் என்றும் தெரிவித்துள்ளனர். (ஒ.10)

## ராஜபக்சக்கள்....

யில் கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. 'சுபீட்சமான எதிர்காலம் சௌபாக்கியமான தாய் நாடு' எனும் தொனிப்பொருளில் சுதந்திர நாள் நிகழ்வு இடம்பெற்றது. கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் நிலைமைக்கு மத்தியில் இம்முறை சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றியே, சுதந்திர நாள் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள், அரச அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் என்று சுமார் ஆயிரத்து 800 பேர் பங்கேற்றனர். (ஒ.22)

## மலையகம்...

யுள்ளனர். கல்வி, போக்குவரத்து போன்ற துறைகளின் பல தொழிற்சங்கங்கள் ஆதரவு வழங்கியுள்ள நிலையில் மலையகம் முடங்கும் என்று ஹற்றனில் நேற்று நடைபெற்ற தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ.இ)

## யாழிலிருந்து...

தற்கு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

விவசாய அமைச்சின் கீழ்வரும் விவசாயத் திணைக்களம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் என்பவற்றை மாங்குளம் பகுதிக்கு இடமாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்ளூராட்சி அமைச்சின் கீழ்வரும் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் கிளிநொச்சிக்கு இடமாற்றப்படவுள்ளது. (ஒ.5)

## தடையில்லை!



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 2021 ஆம் ஆண்டுக்கான மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. நிகழ்வில் அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர பங்கேற்றார். யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனும் கலந்துகொண்டார். இந்த நிகழ்வுக்கு முன்னதான பேரணி மற்றும் கூட்டத்துக்கு 'கொரோனாவை' காரணம் காட்டி பொலிஸார் தடையுத்தரவு எதுவும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.20)



# வென்றது ஈகிள்ஸ்

யாழ்ப்பாணம், பெப். 5
ஜி.பி.சி.எல் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் வடமராட்சி வேங்கைகள் அணியினரை வீழ்த்தியது சுண்டுக்குழி ஈகிள்ஸ்.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற வடமராட்சி வேங்கைகள் அணியினர் துடுப்பாட்டத்தை தீர்மானித்தனர். அந்த அணி 71 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பியட்றிக் 17 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுட்டுக்குழி ஈகிள்ஸ் அணி சார்பாக கஜானன், பிருந்தாபன் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுண்டுக்குழி ஈகிள்ஸ் அணியினர் 19.2 பந்துப்பரிமாற்றங்களில் 73 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர். அதிகபட்சமாக அபினாஸ் 19 ஓட்டங்களையும் ஜனார்த்தனா 18 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சாம்பவன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக அபினாஸ் தெரிவானார். (ம-320)

# இந்தியா – இங்கிலாந்து டெஸ்ட் இன்று ஆரம்பம்

புதுடெல்லி, பெப். 5
இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.
இங்கிலாந்து அணி இந்தியாவில் தற்போது முகாமிட்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் மூவகைத் தொடர்களும் நடைபெறவுள்ளன. முதலாவதாக டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. முதலிரு ஆட்டங்களும் சென்னையில் இடம்பெறுகின்றன.
இந்திய அணியைப் பொறுத்தவரையில் காயமடைந்திருந்த பும்ரா, இசாந் சர்மா, லோகேஸ் ராகுல், பாண்டியா, அஸ்வின் ஆகியோர் அணிக்குத் திரும்பியுள்ளனர். அதேபோல் விருப்ப விடுப்பில் நின்ற அணித் தலைவர் கோலியும் இன்று அணிக்குத் திரும்புகின்றார்.
இங்கிலாந்து அணியைப் பொறுத்த வரையில் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்ட மொயின் அலி மீண்டும் அணியுடன் இணைகின்றார். இன்றைய ஆட்டம் இங்கிலாந்து அணித் தலைவர் ரூட்டுக்கு 100ஆவது ஆட்டமாகும். (ம)



# மிராஸ் மிரட்டல் சதம் பங்களாதேஷ் பலம்!

டாக்கா, பெப். 5
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மிராஸின் அபார சதம் கைகொடுக்க பங்களாதேஷ் அணி பலமான நிலையில் உள்ளது.
நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது. சகிப் அல் ஹசன் 39 ஓட்டங்களுடனும், டாஸ் 34 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள்.
நேற்று 38 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் டாஸ் ஆட்டமிழந்தார். மறுமுனையில் அசைச்சதம் கடந்தார் சகிப் அல் ஹசன். அவர் 68 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அரைச்சதம் கடந்த மிராஸ் ஒரு முனையில் நிலைத்து நின்று விளையாடினார். அவருக்கு தயுல் இஸ்லாம், நயிம் ஹசன் இருவரும் பக்கபலமாக நின்று இணைப்பாட்டம் வழங்கினர். சதம் கடந்தார் மிராஸ்.





பங்காளதேஷ் 430 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மிராஸ் 103 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.
பந்துவீச்சில் யோமல் வறிக்கன் 4 இலக்குகளையும், குரோன்வோல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது நாள் முடிவுக்கு வந்தது. பிரீத்வைட் 49 ஓட்டங்களுடனும், போனர் 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். முஸ்டபிஷுர் ரகுமான் 2 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். (ம)

# கொங்கியூரஸை வென்றது நல்லூர் பிரோன்கோஸ்

யாழ்ப்பாணம், பெப். 5
ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன்ஸ் லீக் (ஜி.பி.சி.எல்) தொடரில் அண்மையில் நடந்த ஆட்டமொன்றில் கொங்கியூரஸ் அணியை வீழ்த்தியது நல்லூர் பிரோன்கோஸ்.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நோர்த் கொங்கியூரஸ் அணியினர் களத்தடுப்பைத் தீர்மானித்தனர். அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரோன்கோஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.
அதிகபட்சமாக டார்வின் 43 ஓட்டங்களையும் லதுஜன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் நோர்த் கொங்கியூரஸ் அணி சார்பாக நிரூசிகன் 3 இலக்குகளையும் மற்றும் கபில்ராஜ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நோர்த் கொங்கியூரஸ் அணியினர் 18.2 பந்துப்பரிமாற்றங்களில் 110 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.
நோர்த் கொங்கியூரஸ் அணி சார்பாக அதிகபட்சமாக கிசாந்துஜன் 29 ஓட்டங்களையும், அனுரதன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நல்லூர் பிரோன்கோஸ் அணிசார்பாக பிரதீப் 3 இலக்குகளையும் டார்வின் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பிரதீப் ஆட்டநாயகனானார். (ம-320)

**கணக்காளர் தேவை**
கிளிநொச்சி கரடிப் போக்கில் இயங்கும் வர்த்தக நிலையத்திற்கு கணக்காளர் தேவைப் படுகின்றார். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண் பணியாளர் மட்டும்)
தொடர்பு: 076 8259927

**தேவை**
வெதுப்பக வேலையில் அனுபவம் உள்ள பணியாளர் தேவை.
மேலதிக விபரத்திற்கு:
0765498733, 0774526983
தொடர்புகொள்ளவும்.

**வேலையாள்கள் தேவை**
யாழ்நகரில் அரிசியாலை ஒன்றிற்கு நாள் சம்பள அடிப்படையில் மற்றும் மாதச்சம்பள அடிப்படையில் வேலையாள்கள் தேவைப்படுகின்றார்கள். கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும்
076 096 9728,076 096 9730

**வேலைவாய்ப்பு**



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கின்றன.

- வரவேற்பாளர் (Receptionist) பகல், இரவு
- ஒப்பு நோக்குநர் (Proof Reader) இரவு
- விளம்பர வடிவமைப்பாளர் (Graphic Designer) இரவு

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் நாளை (06.02.2021) சனிக்கிழமை காலை 09.00- 12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம்தரவும்.
முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.